Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU


C/423 Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L, A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 11 புதன்கிழமை (23.02.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 146

# நாட்டுக்கு எதிராக இணையத்தள யுத்தம்

# எதிர்கொள்ள அனைவரும் தயாராகுங்கள்



## இராணுவத் தளபதி அழைப்பு

(கொழும்பு)


இலங்கைக்கு எதிரான முப்பது வருட கால பௌதிக ரீதியான யுத்தத்தில் வெற்றி கண்டுள்ளோம். ஆனால், இலங்கைக்கு எதிரான இணைய யுத்தம் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கூறினார். கொழும்பில் இடம்பெற்ற இணைய வெளி யுத்தம் தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதார மேம்பாட்டுக்கு அதீத உழைப்பு வேண்டும்

### பனை அபிவிருத்திச்சபை திறப்பு விழாவில் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

பனைசார் வளங்களைப் பெருக்குவது மட்டுமன்றி எதிர்காலத்தில் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்திலேயே உச்சகட்ட பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரி வித்தார்.

பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்தை நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் (11ஆம் பக்கம் பார்க்க)

## பூதவுடல் அக்கினியுடன் சங்கமம் பார்வதி அம்மாளுக்கு இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் வேலுப்பிள்ளை பார்வதியம்மாளின் பூதவுடல் நேற்று மாலை அக்கினியுடன் சங்கமமானது. மிகவும் இறுக்கமான பாதுகாப்பு நடைமுறைகளுக்கு மத்தியில் நடைபெற்ற மேற்படி இறுதி ஊர்வலத்தின் இறுதியில் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெற்றன.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் நெஞ்சங்கள் அனைத்தையும் சோகத்தில் ஆழ்த்திய நிகழ்வாக இந்த இறுதி ஊர்வலம் அமைந்துவிட்டது.

கடந்த 19ஆம் திகதி இவ்வுலகைவிட்டுப் பிரிந்த பார்வதி அம்மாளின் பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக தீருவில் சதுக்கத்தில் வைக்கப்பட்டிருந்தபோது, பலநூற்றுக் கணக்கான பொதுமக்கள் நேரடியாகச் சென்று அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து இவரது பூதவுடல் வல்வெட்டித்துறை ஆலடியில் உள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வந்த திருமாவளவன் திருப்பி அனுப்பப்பட்டார்

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக நேற்று அதிகாலை கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில் உடனடியாக சென்னைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.பார்வதி அம்மாளின் இறுதிச் (12ஆம் பக்கம் பார்க்க)







குடம் சுற்றி, சிரம் தாழ்த்தி வழி அனுப்பும் உறவுகள்

# அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் தொடரும்



(கொழும்பு)

தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு வழங்கப்படும் உரிய காலம் குறித்து அறிவிக்க முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை அலரிமாளிகையில் நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புலிகள் யுத்தம் செய்த போது அவர்கள் கேட்டவற்றை ஒரு போதும் வழங்கமாட்டேன் எனவும், இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து தமிழ்க் கட்சிகளுட னும் பேச்சு மேற்கொண்டுள்ளோம். இப்பேச்சுவார்த்தை எதிர்காலத்திலும் தொடரும் என அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகள் வெளிநாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்படுவதாகவும் அவர் விமர்சித்தார்.

இச்சந்திப்பில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், பஸில் ராஜபக்ஷ, மஹிந்த சமரசிங்க, தினேஷ் குணவர்தன மற்றும் வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மீள்குடியமர்ந்த பகுதிகளில் மருத்துவ சேவை விஸ்தரிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வைத்திய சாலைகளில் உள்ள வைத்தியர் களின் வெற்றிடங்களை நிரப்பு வதற்கு சுமார் 50 வைத்தியர்கள் உடன் தேவையாகவுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் ஆ.கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வைத்தியர்கள் வெற்றி டம் தொடர்பாக சுகாதார சேவை கள் பணிப்பாளருக்கும் அமைச் சருக்கும் தொடர்ந்தும் அறி வித்து வருவதாகவும், இருந்தும் ஒருசில வைத்தியர்கள் மட்டுமே இங்கு அனுப்பிவைக்கப்படுகின் றனர் எனவும் தெரிவித்த அவர், இதனால் எம்மக்களுக்கான திருப்திகரமான மருத்துவ சேவையை வழங்கமுடியாதுள் ளதாகவும் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் யுத்த காலத்தில் இருந்ததைவிட தற் போது உயர்பாதுகாப்பு வலயங் கள் அகற்றப்பட்டு மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளில் வைத்திய வசதிகளை விரிவு படுத்த வேண்டிய தேவை உள் ளது.

இப்பிரதேசங்களில் வைத் தியசாலைகளும் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன. எனவே இப் பகுதி மக்களுக்கு சேவையாற் றவும் ஏனைய பகுதிகளில் வெற் றிடமாகவுள்ள வைத்தியர் வெற் றிடங்களை நிரப்பவும் வைத்தி யர்கள் பற்றாக்குறையாகவுள்ளது.

எனவே சுமார் 50 வைத்தியர் கள் உடன் தேவையாகவுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (பா)

# நெல்லியடியில் புதிய சட்டம்

(கரணவாய்)

அதிகமாக இடம்பெற்றுவரும் விபத்துச் சம்பவங்களைத் தடுக் கும் நோக்கில் 49 சி.சி மோட் டார் சைக்கிள்களில் பயணம் செய்பவர்களும் தலைக்கவசம் அணியவேண்டும் என நெல்லி யடி பொலிஸார் நேற்று உத்தர விட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

நேற்று நெல்லியடி பிரதேசத் தில் தலைக்கவசம் அணியாது குறித்த சைக்கிளில் பயணம் செய்த 100 மோட்டார் சைக்கிள் கள் நெல்லியடி பொலிஸாரி னால் பிடிக்கப்பட்டு விசார ணைக்குட்படுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட மோட்டார் சைக் கிள் காப்புறுதி தொடர்பாக நட வடிக்கை மேற்கொள்ளப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக விபத்துக்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் முக மாகவே நெல்லியடி பொலிஸார் இந்நடவடிக்கையை உடனடி யாக அமுல்படுத்தியுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.(18)

# தகவல் தொடர்பாடல் டிப்ளோமா பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபை யின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா தர தேசிய சான்றிதழ் பெறு வதற்கான பயிற்சிநெறிக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமை

தகவல் தொடர்பாடல் தொழில நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பயிற்சிநெறியில் (NCICT) சித்தி யடைந்திருத்தல் வேண்டும். அல் லது க.பொ.த (சா/த) பரீட்சை யில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் இரு தடவை களுக்கு மேற்படாமல் திறமைச் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் கணினி தொடர் பான அடிப்படைத் தகைமை களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண ணப்ப முடிவுத் திகதியன்று 16 - 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதியுடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறித்து சுய மாகத் தயாரிக்கப்பட்ட விண் ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 07.03.2011 இற்கு முன்னர் அனுப்பிவைக்கு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின் றனர்.

அத்துடன் காகித உறையின் மேல்மூலையில் NDICT இற் கான விண்ணப்பம் என்று தவ றாது குறிப்பிடப்படவேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள விலா சத்தில் அமைந்துள்ள NAITA அலுவலகத்தில் தொடர்புகொள் ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# பண்ணிசைப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட பண்ணிசைப் போட் டிகள் விரைவில் நடத்தப்படவுள ளன.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதி திங் கட்கிழமை முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார்.

தரம் 10 சைவநெறி பாடப் பரப்பிலுள்ள திருமுறைப் பாடல் கள், தோத்திரப் பாடல்கள் அனைத்தையும் மாணவர்கள் மனனம் செய்தல் வேண்டும். திரு வுளச்சீட்டு மூலம் தெரிவுசெய் யப்படும் பாடலை பண்ணோடும் பக்தியோடும் பாடுதல் வேண்டும.

இறுதிச்சுற்றுக்கு தெரிவாகும் மாணவர்கள் பஞ்சபுராணம் பாடு தல் வேண்டும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (11)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தர வாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங் கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 0212228680, 0775925088 (R/017)


# மதுவுக்குள் மயக்க மருந்து; மயங்கிய முதியவரிடம் கொள்ளை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நகரப் பகுதி யில் வயோதிபர் ஒருவரை மய க்கமுறச் செய்து தங்க நகை கள் மற்றும் பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவம் தொடர் பாகத் தெரியவருவதாவது, ஊர் காவற்றுறை நகரப் பகுதியில் நின்றிருந்த வயோதிபர் ஒருவரி டம் தாங்கள் வெளிநாட்டில் இருந்து வந்ததாக அறிமுகம் செய்த சிலர் அவரைத் தம்முடன் மகிழ்ச்சிகரமாக மது அருந்தும் படி அழைத்துச் சென்று ஊர்கா வற்றுறை நகர் கடற்கரையினை அண்மித்த பகுதியில் மதுபா னத்தினுள் மயக்கம் ஏற்படுத்தும் பதார்த்தத்தினைக் கலந்து வயோதிபருக்கு கொடுத்ததாக வும் அதனை அருந்திய வயோ திபர் மக்கமடைந்ததும் அவரின் கைகளில் இருந்த இரண்டு மோதிரங்கள் மற்றும் அவரது சட்டைப் பையில் இருந்த ஒரு தொகைப் பணத்தையும் திருடிக் கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நபர் மயக்கமுற்ற நிலையில் அநாதரவாகக் கிடந்த மையினை அவதானித்த பொது மக்கள் சிலர் அவரை ஊர்காவற் றுறை அரசினர் வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர். பல மணி நேரங்களின் பின்பே வயோதிபர் மயக்கம் தெளிந்து தான் ஏமாற்றப்பட்டமையினை உணர்ந்துள்ளார். மேற்படி சம்ப வத்தில் ஊர்காவற்றுறை தம் பாட்டியைச் சேர்ந்த முத்துத்தம்பி நடராசா (வயது-67) என்ற முதி யவரே பாதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (27)

# 'கலாவதி' சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பலாலி ஆசிரியர் கலா சாலையின் மாணவர் மன்றத் தினரால் வருடாந்தம் வெளியி டப்படும் 'கலாவதி' 2010 இற் கான சஞ்சிகை வெளியீடு இன்று காலை 9 மணிக்கு ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள கலாசாலை மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல் கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரி யருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தினராக வும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய ஓய்வுபெற்ற முன் னாள் அதிபரும் கலாசாலை அபிவிருத்தி ஆலோசனைக்குழு அங்கத்தவருமான ஆ.சி.நடராஜா சிறப்பு விருந்தினராகவும், நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பர மாச்சார்ய சுவாமிகள் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள் ளவுள்ளனர்.

## விசேட கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன் றத்தின் உள்ளூராட்சி மறுசீர மைப்பு மற்றும் நகர அபிவிருத்தி ஆலோசனை சபைக் கூட்டம் என்பன எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2 மணி க்கு மன்றின் செயலாளர் தலை மையில் நடைபெறவுள்ளது. (11)

## சிவராத்திரி வரலாறு

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு 'சிவராத்திரி வரலாறு' என்னும் நூலை 525/2, காங் கேசன்துறை வீதியில் உள்ள மில்க்வைற் தொழிலகத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தொழிலதிபர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார்.

# விசேட கலந்துரையாடல்

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாதாந்த கல்வி உத்தியோகத்தர்களுக்கான கலந் துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபை காரியா லய மண்டபத்தில் எதிர்வரும் 01.03.2011 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை மு.ப 9 மணிக்கு சபைத்தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவி ருத்தி உதவி ஆணையாளர் கலந்துகொண்டதுடன், 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடை முறைப்படுத்தப்பட்ட கல்வி விஸ்தரிப்பு வேலைத்திட்டச் செயற்பாடுகள் பற்றி ஆராய் வதுடன், 2011 மார்ச் மாதம் வரை நடைமுறைப்படுத்தப்பட வுள்ள வேலைத்திட்டங்கள் பற்றி தீர்மானிக்கப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கூட்டு றவு நிறுவனங்களினதும் கல்வி உத்தியோத்தர்களையும் பங்கு பற்றுமாறும் ப.நோ.கூ சங்கங்கள் அங்கத்துவ அதிகரிப்பு வேலைத் திட்டம் தொடர்பான தகவல்களு டன் சமுகமளிக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (27)




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர்: ம.அபிராம்

முகவரி: இல.388 பிரதான வீதி பருத்தித்துறை

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

---

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

ஒழுக்கம் இருவகைப்படும். தனிமனிதன் ஒழுக்கம், வாழும் சமுதாயத்தோடு கொண்டுள்ள சமுதாய ஒழுக்கம். தனிமனித ஒழுக்கத்திலும் பெரிது சமுதாய ஒழுக்கம்.

- குன்றக்குடி அடிகளார் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

# பகையுணர்வு அல்ல

வடகடல்வளம் சுரண்டப்படுவதை கண்டித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களினால் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நேற்று முன்தினம் யாழ். நகரில் நடத்தப்பட்டுள்ளது.

கண்டனப் பேரணியில் கலந்து கொண்ட ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய மீன்பிடியால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக யாழில் உள்ள இந்தியத்துணைத்தூதரக அதிகாரியிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர்.

இலங்கை-இந்திய கடல் எல்லைகளைத் தாண்டி மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் இன்று நேற்று வரை ஈடுபட்டுவரவில்லை. மிக நீண்ட காலமாக இருதரப்பினரும் ஈடுபடும்போது ஒரு தரப்பு மறுதரப்பைக் குற்றஞ்சாட்டிவருவது வழமையான தொன்றாகும்.

புரிந்துணர்வு இன்றி வாழ்வாதாரத்தை அடிப்படையாக வைத்தே அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் ஏற்படவிருக்கும் பின்விளைவுகள் பற்றி இவர்கள் சிந்திப்பதில்லை.

மூன்று தசாப்தகாலமாக இடம் பெற்ற உள்ளூர் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுள் கடற்றொழிலாளர்கள் முதன்மையானவர்கள் என்பதை அனைவரும் அறிவர்.

எத்தொழிலில் ஆயினும் தொழில்நுட் பங்களைப் பயன்படுத்தி அத்தொழில்களில் சாதனை புரிவதில் தமிழ் மக்களுக்கு நிகர் எவருமில்லை.

போருக்கு முன்னான காலங்களில் ஆழ் கடல் சென்று மீன் பிடித்து பொருள்வளம் ஈட்டியவர்கள் குடாநாட்டுக் கடற்றொழிலாளர்கள்.

இத்தகைய யாழ். கடற்றொழிலாளர்களின் கைகளையும், கால்களையும், கட்டிப் போட்டமாதிரியான செயற்பாட்டில் இந்திய மீனவர்கள் ஈடுபட்டு வருவது கவலை அளிப்பதாக உள்ளது. வட கடலில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் இங்கு தடைசெய்யப்பட்டுள்ள இழுவைப்படகு மூலம் மீன்களைப்பிடிப்பதுடன், யாழ். மீனவர்கள் பயன்படுத்தும் வலைகளை அறுத்தெறிந்தும் திருடியும் செல்வதாக மீனவர்கள் குற்றம் சுமத்தி வருகிறார்கள்.

யாழ். மீனவர்கள் சுமத்தும் இக் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லாமலும் இல்லை. இவை ஒருபுறமிருக்க, குற்றம்சுமத்துபவர்களின் குற்றச்சாட்டுகளை உரிய அதிகாரிகள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இந்த மீனவர்களின் பிரச்சினையில் அதிகம் குளிர்காய்பவர்கள் அரசியல்வாதிகள்தான். இவர்கள் அரசியலில் இலாபம் தேடும் வகையில் தொட்டிலையும் ஆட்டி, பிள்ளையையும் கிள்ளிவிடும் செயலில் சீண்டிவிட்டு விளையாட்டுப்பார்க்கிறார்கள்.

இவர்களின் இத்தகைய குள்ளநரிநோக்கத்திற்கு மீனவர்கள் இரையாகாமல் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். யுத்தம் முடிந்து இயல்புவாழ்க்கைக்குத்திரும்பிய போதும் தம்சொந்தக்காலில் நின்று தொழில்கள் செய்து வாழ்வை வளப்படுத்த முற்படும் போது ஏற்படும் தடைகளில் இருந்து அவர்கள் விடுபடுவதற்காகப் போராட வேண்டியுள்ளது.

அத்துமீறி மீன்பிடிப்பதற்கு தூண்டுதல் செய்வோருக்கு சாட்டை அடிகொடுக்குமாப் போல், இலங்கைக்கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் ஊடுருவி மீன்பிடித்தால் அவற்றை பறிமுதல் செய்யப போவதாகவும், ஒரு மாதத்திற்கு தொழிலில் ஈடுபடாதவாறு தடுப்பதெனவும் நாகை மீனவர்கள் சங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதையும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஒப்புக்கொண்டிருப்பதும், பேச்சுவார்த்தை மூலமாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் காலம் வெகுதூரத்திலில்லை.

எப்படி இருப்பினும், தமது பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்று அவர்கள் காட்டிய உணர்வானது வயிற்றுப்பசியைப் போக்கவே அன்றி இந்தியாவைப் பகைத்துக்கொள்ள அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

-ஆசிரியர்-

# வடக்கில் நெக்ரெக் நிறுவனத்தால் 35 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும்!

(கிளிநொச்சி)

வடமாகாணத்திலுள்ள கரையோரப் பிரதேச சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் நெக்ரெக் (neeltec) நிறுவனத்தால் மேற்கொள்ளப படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான செயலமர்வு ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் வடமாகாணத்திலுள்ள கரையோரக் கிராமங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகத தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் பூநகரி பிரதேசத்தில் உள்ள 12 கிராமங்களும் கண்டாவளைப் பிரதேசத்தில் 11 உம், பச்சிலைப்பபள்ளி பிரதேசத்தில் 11 உம், கரைச்சி பிரதேசத் தில் 01 உம் ஆக 35 கிராம சேவையாளர் பிரிவுகளில் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இச் செயலமர்வில் ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் மற்றும் நெக்ரெக் நிறுவன கருத்திட்டப் பணிப்பாளர் குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (28)

# இலகு வேலை உணவுத்திட்டம் மீண்டும் நடைமுறைக்கு வரும்?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உலக உணவுத் திட்டத்தின் இலகு வேலைக்கான உணவு வழங்கும் திட்டம மீளவும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ளதாகவும், அதற்கான அனுமதி உலக உணவுத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படுவதாகவும் யாழ். செயலக உலக உணவுத்திட்டப் பணிமனையினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் வருமானம் குறைந்த பல குடும்பங்கள் இத்திட்டத் தின் கீழ் பயனடைந்து வந்தன. தற போதைய சூழலில் உணவுப் பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துச் செல்வதனால் வருமானம் குறைந்த இக் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் மீளவும் உலக உணவுத் திட்டத்தினால் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் பெருமளவான வருமானம் குறைந்த குடும்பங்கள் இதன் மூலம் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இவ்வாறான உலக உணவுத் திட்டத்தின் இலகு வேலைக்கான உணவுத்திட்டம் வன்னிப் பகுதிகளில நடைமுறையிலுள்ளமை குறிப்படத்தககது. (பா)

# 6 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியேறுவதற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ள சுமார் 6 ஆயிரம் குடும்பங்களுக்கும், மேலும் குடியேறக் காத்திருப்போருக்கும் வேண்டிய உதவிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூகநற்பணி மன்றச் செயலாளர் எஸ். ஏ.சி. றியாஸ் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது, 1990 ஆம் ஆண்டு வடக்கிலிருந்து இடம பெயர்க்கப்பட்ட யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத் திற்காக எந்தவொரு நிறுவனமும் யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை.

இந்நிலையில் யாழ். மானிப்பாய் வீதி முஹிதீன் பள்ளிவாசல் தலைவர் சரபுல் அனாம் மக்களுக்கு தொண்டு செய்யும் நோக்கில், தன்னார்வத்தோடு கிளிநொச்சி அரச அதிபரின் மூலம் வடக்கில் "துரித மீட்சித் திட்டம்" (E.N.R.E.D) நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு கிளிநொச்சி 55 ஆம் கட்டையில் மீள்குடியேறிய 97 குடும்பங்களுக்கு தலா 25.000 ரூபா வழங்க ஏற்பாடாகி 31.01.2011 அன்று பதிவுகளும மேற்கொள்ளப்பட்டன.

ஆகவே, இம்மாபெரும் உதவியைச் செய்த அரச அதிபர் அவர்களுக்கும் தலைவர் சரபுல் அனாம் துரித மீட்சித்திட்ட நிறுவனத்திற்கும் சம்பந்தப்பட்ட மக்கள் சார்பாக நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். என்று தெரிவிக்கப்பட்டது.

# மலேசியா அரசின் நிதி உதவியுடன் அம்பன் வைத்தியசாலை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு அம்பன் வைத்தியசாலை மலேசிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பதினாறு மில்லியன் ரூபா செலவில் முழுமையாக நிர்மாணிக் கப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யுத்தகாலத்தின் போது பாதிக் கப்பட்டிருந்த இவ்வைத்திய சாலையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மலேசிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 16 மில்லியன் ரூபா செலவில் புதிதாக இவ்வைத்திய சாலை நிர்மாணிக்கப்படவுள் ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வைத்திய சாலையும 'என்றிப்' திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபா செலவில் முழுமையாக நிர்மாணிக்கப் படவுள்ளமை தெரிந்ததே

இவ் இரு வைத்தியசாலை நிர்மாணப பணிகளுக்கான (ஒப்பந் ததாரர்களிடம்) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்தாகவும் குறிப்பிட்ட அவர் இது நிறைவு பெற்றதின் பிற்பாடு இவ் வைத்திய சாலைகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்சமயம் அங்கு மீள்குடியமர்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெற வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதனால் விதி18.1 ன் கீழ் கூட்டப்படும் இக் கூட்டத்தில் சங்க இயக்குநர் சபையின் செயற்பாடுகள் குறித்தும், சங்கத்தின் தற்போதய நிலவரம் தொடர்பாகவும் பொதுச் சபை உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையிலேயே இக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மனைப்பொருளியல் ஆசிரியர்களுக்கு வாண்மைவிருத்திப் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

மாகாணக் கல்வித்திணைக்களத்தின் தொழில்நுட்பக் கல்விப்பிரிவினால், தொழில் நுட்பப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயன்முறை வாண்மை விருத்திகளை மேம்படுத்தும் பொருட்டு பயிற்சிப்பட்டறை ஒன்று வட்டுக்கோட்டையில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் அடுத்த மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் காலை 8 மணிமுதல் மாலை 8 மணி வரை நடைபெறவுள்ளது.

க.பொ.த். சாதாரண தரத்தில் மனைப்பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள முடியும்.

இப் பயிற்சிப்பட்டறைக்கு ஒவ் வொரு கல்வி வலயத்திலும் இருந்து 5 ஆசிரியர்களைத் தெரிவு செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ள உள்ள ஆசிரியர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் தங்குமிடவசதிகள் ஒழுங்கு செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்குமிட வசதிகள் தேவைப் படுவோர் தமது வருகையை அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு முன் உறுதிப்படுத்துமாறும், இது சம்பந்தமாக உதவிக் கல்விப் பணிப்பாளர். கி. கமலராயனுடன் 0772152232த் இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார். (109)



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற மீலாத் விழாவில் போட்டியில் வெற்றியீட்டிய மாணவருக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தெஹிவளை வைத்தியசாலை வைத்தியர் எம்.எ.ஸி ரம்ஸி பரிசு வழங்குவ தையும் அருகில் அதிபர்எம்.எஸ்.ஏ.எம். முபாரக் நிற்பதையும் காணலாம். (19)

# யாழ்.நகரிலுள்ள மலசல கூடங்களை சீர்செய்ய மாநகரசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப் பகுதியில் பொதுமக்கள் பாவனையிலுள்ள அனைத்து மலசல கூடங்களும் பாவிக்க முடியாமல் துர்நாற்றம் வீசுவதுடன் அசுத்தமாகக் காணப்படுவதாகவும் இது குறித்து சம்பந்தப்பட்ட மாநகர சுகாதார பரிசோதகர்கள், சுகாதார கண்காணிப்பாளர் ஒரு கிழமைக்குள் சரி செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடுவதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாநகரசபையின் இந்த ஆண்டின் முதலாவது சுகாதாரக் குழுக் கூட்டம் யாழ்.மாநகர சபையின் சுகாதாரக் குழுவின் தலைவர் மனுவல் மங்களநேசன் தலைமையில் நடைபெற்றது. இங்கு சமூகமளித்திருந்த யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டவர்களிடம் இவ்விடயம் குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே யாழ்.மாநகரப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், திரையரங்குகள், நவீன சந்தை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பெற்றுள்ள மலசல கூடங்களும், பொது மலசல கூடங்களும் சுகாதாரமற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருவதாக பல தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இது குறித்து அப்பகுதிகளில் பரிசோதனை செய்யப்பட்டு அத்தகைய நிலை உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் இதுகுறித்து நேற்றைய சுகாதாரக் குழுக் கூட்டத்தின் போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனையடுத்தே எதிர்வரும் ஒரு கிழமைக்கு இடையில் அத்தகைய நிலையினைச் சரிசெய்யுமாறு மாநகர சுகாதாரக் குழுவின் தலைவர் மனுவேல் மங்களநேசன் சுகாதரப் பரிசோதகர்களுக்கும், சுகாதாரக் கண்காணிப்பாளர்களுக்கும் உத்தரவு பிறப்பித்தார். (பா)

## யன்னல் பிரித்து ஆடைகள் திருட்டு

(பாஷையூர்)

பாஷையூர் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சுமார் ஒன்றரைலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போன சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருட்டுச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

திருட்டு இடம்பெற்ற வீட்டுச்சொந்தக்காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது யன்னலைப்பிரித்து வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சூட்கேஸைக் கத்தியால் கிழித்து விட்டு அதிலிருந்து பெறுமதி வாய்ந்த உடுபுடவைகள் மற்றும் அழகு சாதனப் பொருட்களையும் திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (21)

## மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 3 வாய்க்கால்கள் புனரமைப்பு

(கரணவாய்)

வடக்கின் மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் கரணவாய் கிழக்கிலுள்ள 3 வெள்ள வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச சபைக்கு உட்பட்ட இவ்வாய்க்கால்களைப் புனரமைப்பதற்கான வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் கரணவாய் கிழக்குப் பிரதேச மக்கள் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இப்புனரமைப்பு வேலைகள் நேரடியாக மீள் எழுச்சித்திட்ட உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுகக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

# வாக்காளர் சான்றிதழை வழங்க மறுக்கும் தேர்தல் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

நேர்முகத் தேர்வுக்குத் தோற்றுவோருக்கு வாக்காளர் இடாப்பில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு உண்மைப் பிரதியென உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் சான்றிதழ்களை தற்பொழுது வழங்க இயலாதிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் இயங்கும் வாக்காளர் பதிவுக் கந்தோர் மற்றும் தேர்தல் அத்தாட்சித் திணைக்களமே இவ்வாறு அறிவித்துள்ளது. தவிர்க்க முடியாத காரணங்களால் இவ்வாறு உடனடியாக இவற்றை வழங்க இயலாதிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தவார நடுப்பகுதியில், முகாமைத்துவ உதவியாளர் பரீட்சையில் தேறி, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோர் இந்தச் சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறான வதிவிட மற்றும் வாக்காளர் இடாப்புப் பிரதிகள் நேர்முகப் பரீட்சைகளின்போது சமர்ப்பிக்குமாறு கோரப்படுவது வழமையானதாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (23)

## நாடகப் பயிற்சி வகுப்புகள்

(முல்லைத்தீவு)

சேவா லங்கா நிறுவன ஆதரவில் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் பாடசாலைகளில் கொத்தணி அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான நாடகப் பயிற்சிப்பட்டறைகள், இன்று புதன்கிழமை மற்றும் நாளை வியாழக்கிழமை ஆகிய தினங்களில் கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (42)

# வடமாகாண கடற்றொழிலாளர்கள் பிரச்சினை குறித்து மாபெரும் கூட்டம்

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துக் கடற்றொழிலாளர்களின் சங்கங்களினதும் பிரதிநிதிகளுக்கான மாபெரும் கூட்டமொன்று இம்மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்படத்தில் நடைபெறவுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முன்னிலையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு உரிய தீர்வுகள் எட்டப்படவுள்ளன.

குறிப்பாக ரோலர்களினால் ஏற்படும் பிரச்சினைகள், இந்திய கடற்றொழிலாளர்களது ஆக்கிரமிப்பு, சிறுதொழிலாளர்கள முகங்கொடுத்து வரும் நெருக்கடிகள் உட்படப் பல்வேறு விடயங்கள தொடாபில் இதனபோது விரிவாக ஆராயப்படவுள்ளன.

எனவே இக்கூட்டத்தில் தத்தமது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் முன்வைக்கும் முகமாக யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த அனைத்துக் கடற்றொழிலாளர் சங்கங்களினதும் பிரதிநிதிகள் இக்கூடத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# மல்லாகம் வயல்வெளியிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு



(யாழ்ப்பாணம்)

மல்லாம் வயல்வெளிப் பகுதியிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலத்தைச் சுன்னாகம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இளவாலையைச் சொந்த இடமாவும், மல்லாகத்தில் வசித்து வந்தவருமான திருநாவுக்கரசு கோகுலகாந்தன் (வயது-34) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலமாக மீட்கப்பட்டவர் சித்தசுவாதீன மற்றவர் என்றும், தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் என்றும் அவ்வூர் மக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் நீதிவான் சடலத்தைப் பிரதே பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (மி)

# துறைமுகத்தை ஆழமாக்க கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு-குறிகாட்டுவானுக்கு இடையில் கடந்த வாரம் முதல் சேவையில், ஈடுபட்ட வடதாரகைப் படகு நெடுந்தீவுத் துறைமுகத்திற்குள் நுழைய முடியாது படகின் ஏரா என்ற அடிப்பாகம் கரையைத் தட்டுவதால் இந்தப் படகு சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நெடுந்தீவுக்கான சேவையில் கூட்டுறவுச் சங்கங்களின் படகுகளே ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. எனினும் நெடுந்தீவுக்கான வடதாரகைப் படகு தமக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்த நிலையில் தற்போது கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலை காணப்படுவதாக நெடுந்தீவு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இபபடகு துறைமுகத்திற்குள் செல்ல வேண்டும் என்றால் துறைமுகம் அகலமாக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் துரித கதியில் துறைமுகத்தை அகலமாக்கிப் படகை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (14)

# யாழ்.மத்தியஸ்தர்களுக்கு 25ஆம் திகதி நியமனக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபைக் குத் தவிசாளர், உதவித் தவிசாளர் உட்பட 23 பேர் கடந்த 5ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ் உறுப்பினர்கள் நியமனத்துக்காக கடந்த வருட இறுதிப் பகுதியில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் சித்திய டைந்த மத்தியஸ்தர் சபைகள் ஆணைக் குழுவில் தெரிவு செய்யப்பட்டவர்களே நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங் கள் எதிர்வரும் 25ஆம் திகதி வெள் ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நிகழ்வில் வைத்து வழங்கப் படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நீதிபதிகளும், கிராம அலுவலர்களும் கலந்து கொள்ள இருப்பதாகத் தவிசாளர் வி.ஸ்ரீசக்திவேல் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மத்தியஸ்தர் சபையின் உறுப்பினர்கள் விபரம் வரு மாறு-

வே.ஞானகாந்தன், திருமதி கௌரி முரளிதரன், நீக்கிலஸ் பிரபாகரன், க.இளங்கோவன், செ.சுப்பிரமணியம், செல்வி சகிலா சரவணை, சு.கணேசலிங்கம், சு.கோபாலசிங்கம், வி.மாணிக்கம், பா.வின்சென்ற், செ.யோ.மரியநாயகம், ஆ.யூலியன், சி.இ.லோகநாதன், சு.நடராசலிங்கம், சா.கிரிதரன், ஆ.ஆனந்த ராஜா, யோபு வில்பிரட் ஜீவராஜா, பொ.பஞ்சலிங்கம், ஞா.லூயிஸ் அன்ரனி, இ.திலகரட்ணம், வே.சுந்தரலிங்கம், நா.பிரபாகரன்.

## தொண்டர் சேவையைப் பெற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் சிற்றூழியர் தேவையின் பிரகாரம் யாழ் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமும் யாழ். சென்.ஜோன்ஸ் தொண்டர் படையினரிடமிருந்தும் தொண்டர் சேவைக்கு ஐம்பது பேரைத் தந்துதவுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையினரால் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் தொண்டர் அடிப்படையில் பணியாற்றிய ஒரு தொகுதிப்பேருக்கு சிற்றூழியர் நியனம் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இருந்தும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 50 இற்கும் மேற்பட்ட சிற்றுழியர் வெற்றிடங்கள் இருந்த வண்ணமேயுள்ளன. இவ்வெற்றிடங்களுக்குத் தொண்டர் அடிப்படையில் பணியாளர்களை அமர்த்துவதற்கு யாழ்.வைத்தியசாலை முயற்சி மேற்கொண்டுள்ளது. இதன் பிரகாரம் 30 ஆண்கள் மற்றும் 20 பெண்கள் அடங்கலாக மேற்படி அமைப்புக்களிடம் இருந்து சேவையைப் பெற்றுக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவர்கள் ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு 175 ரூபா கொடுப்பனவு வழங்கப் படவுள்ளது எனவும் தெரியவருகிறது (பா)

# பிறர்மீது குற்றம் காண்பதை விடுத்து நாம் நிறைவாக வாழப் பழக வேண்டும்

## வள்ளுவர் காட்டிய வழி இதுவே என்கிறார் லலீசன்

(யாழ்.நிருபர்)

மற்றவர்களிடம் குறை காணும் பண்பு எம்மைக் கீழான நிலைக்கு இட்டுச் சென்றுவிடும். நாம் பிறரிடம் குறைகாண்பதை விடுத்து, நிறைவாக வாழவேண்டும். இதுவே வள்ளுவன் காட்டிய வழி.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நடத்திய திருவள்ளுவர் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் ஆ.வடிவேலு தலைமையில், சங்கச் செயலகத்தில் நடைபெற்ற இவ விழாவில் லலீசன் தொடர்ந்து பேசுகையில் -

தமிழ்மொழியின் குறியீடு திருவள்ளுவர். அவர் எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்பதை யாரும் உறுதியாகக் கூறவில்லை. எல்லா மதத்தினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர் திருக்குறளைத் தந்துள்ளார்.

பண்டைய இலக்கிய நூல்களின் கருத்துக்களை எல்லாம் உள்வாங்கி குறுகிய வரிகளில் செறிந்த பொருள் நிறைந்த குறளை வள்ளுவர் தந்திருக்கிறார். இவர் கிறிஸ்து பிறப்பதற்கு 31 ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர். அதனால்தான் இந்த வருடத்தை வள்ளுவர் ஆண்டு 2042 என்கிறோம்.

திருக்குறளை மனனம் செய்வதற்கு சிறுவயதிலிருந்தே தமது பிள்ளைகளைப் பெற்றோர் ஊககு விக்க வேண்டும். நமது நாட்டில் திருக்குறளில் ஒருசில அதிகாரங்களை, உயர் வகுப்பு மாணவர்களின் பாடத் திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். ஒரு குறளை மனனம் செய்வதற்கே உயர்தர மாணவர்களும் கலாசாலை மாணவர்களும் பெரும் சிரமப்படுவதை நான் அறிவேன.

கந்தபுராண கலாசாரம் நிலவி வந்த யாழ்ப்பாணத்தில் மீண்டும் அத்தகையதோர் சிறந்த கலாசாரப் பண்புகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன அகில இலஙகை காந்திசேவா சங்கம் பல்வேறு நற்பணித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது.

கடந்த மாதம் காந்தி ஜெயந்தி தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடிய இச்சங்கம் இந்த மாதம் வள்ளுவனுக்கு விழா எடுப்பது பாராட்டுக்குரியது.

வள்ளுவனுக்கு விழா எடுப்பதோடு நின்றுவிடாது வள்ளுவன் சொன்ன வாழ்வியல் நெறியைப் பின்பற்றி நாம் வாழ முற்படவேண்டும் எனவும் கூறினார்.

ஆரம்பத்தில் வைத்திய சாலை வீதியில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மலர்மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டது. அகில இலங்கை காந்தி சேவாசங்க மூத்த காந்தியவாதி சோ.க.தம்பிப்பிள்ளை மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். சங்கத்தின் பொதுச்செயலாளர் வி.ஜி.தங்கவேல் நன்றிநவின்றார். (10)

## கொடியேற்றம்

பருத்தித்துறை கொட்டடி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (109)

## யாழில் நேர்முகப் பரீட்சை

கடந்த வருடம் நடைபெற்ற முகாமைத்துவ உதவியாளர் பதவி தரம் -111 இற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 24ஆம் திகதி 695, நாவலர் வீதியில் உள்ள மாகாணப் பொது நிர்வாகச் செயலகத்தில் நடைபெறுமென பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தேர்வு செய்யப்படுவோர் பிறப்புச் சான்றிதழ், பெண் விவாகமானராயின் விவாகச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ், (சாதாரண, உயர்தர), வதிவிடச் சான்றிதழ் (3வருடத்தை உறுதிப்படுத்த வேண்டும்), வலது குறைந்தவராயின் மருத்துவச் சான்றிதழ் வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதியுடன் அவற்றைப்போட்டோப் பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டும எனவும் அவர் அறிவித்துள்ளார். (23)

## வீதியோர மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தின் போக்குவரத்து நிறைந்த வீதியோரம் ஒன்றில் தக்காளிச் செடிகள் பயிரிடப்பட்டு மிகச் செழிப்பாக வளர்ந்திருப்பதுடன், காய்களும் காணப்படுகின்றன. ஏறக் குறைய 15 தக்காளிச் செடிகள் இவ்வாறு பயிரிடப்பட்டு நீர் ஊற்றப்பட்டு வருகின்றன.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உளள வேம்படி வீதியும், முதலாம் குறுக்கு வீதியும் சந்திக்கும் இடத்தில் வேம்படி வீதிக் கரையோரத்தின் வடக்குப்புறமாகப் பயிரிடப் பட்டுள்ள தக்காளிக் கன்றுகளுடன் மிளகாய்ச் செடிகளும் காணப் படுகின்றன.

மூன்று அடி அகலமான இந்தப் பகுதியில் அந்தப் பகுதியில் உள்ள பாதுகாப்புப்படையினரே இம் மரக்கறிச் செடிகளைப் பயிரிட்டுள்ளனர்.

மரக்கறிகளின் விலை உயர்வு, பற்றாக்குறை என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண மக்களுக்குப் பாதுகாப்புத் தரப்பினரின் இந்தச் செய்முறை முன மாதிரியாக அமையுமா? (23)

## பிரேக் இல்லாத சைக்கிள்கள் மீது கவனம் செலுத்தும் பொலிஸார்

(அச்சுவேலி)

சரியான முறையில் தொழிற்படாத பிரேக் இல்லாத துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்யும் துவிச்சக்கர வண்டிப் பயணிகள் மீது அச்சுவேலிப் பகுதியில் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பயணிக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும், விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய வகையிலுல் 'பிரேக்' இல்லாது பயணம் செய்யும் சைக்கிள் ஓட்டிகளை உன்னிப்பாகக் கவனித்து வரும் பொலிஸார், அவ்வாறான சைக்கிள் ஓட்டிகளைத தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு அறிவுரைகளை வழங்கி வருவதுடன், தொடர்ந்தும் அவ்வாறு பயணம் செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்தபின் அவர்களை விடுவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (03)

## வீதி புனரமைப்பு

(முத்தையன்கட்டு)

முன்று தசாப்த காலத்தின் பின் கற்சிலைமடு விலிருந்து முத்தையன்கட்டு நோக்கிச் செல்லும் பாதை புனரமைக்கப் பட்டு வருகின்றது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இவ் வீதி கருங்கற்கள் இடப்பட்டு தார் வீதியாகச் செப்பனிடப்பட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியில் குறுககறுத்துச் செல்லும் இவ்வீதி கிரவல் பாதை போக்குவரத்துக்கு உரியதாக இதுவரை காணப்பட்டமையும், இவ் வீதியில் பண்டார வன்னியன் நினைவுக் கல்லும், முத்தையன்கட்டுக் குளமும் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதனைப் பார்வையிடத் தென்பகுதி மக்களும் வருகை தருவதனை அவதானிக்க முடிகிறது. (42)

## ஆதினியின் இன்றைய பலன்

(23.02.2011 - புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 11

இராகுகாலம் 12.30- 2.00, சுபநேரம் 5.00 -6.30,
ஷஷ்டி பி.இ.1.31,
சுவாதி மு.இ.8.41 சித்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:- துணிவான செயல், பண வரவு, மதிப்பு உயரல்.

ரிஷபம்:- உதவிகள் செய்தல், தல யாத்திரை, மேலாளர் உதவி.

மிதுனம் :- மன நிறைவு, தானதர்ம விருப்பு, ஆரோக்கியம்.

கடகம்:- பண வரவு, ஆடம்பரச் செலவு, நண்பர் சேர்க்கை.

சிம்மம்:- இரத்தக்கொதிப்பு, மாறாட்டம், அவமானப்படல்.

கன்னி :- திருடர் பயம், பொருள் விரயம், அகால போசனம்.

துலாம் :- பெண்கள் நேசம், உடல்நல விருத்தி, தாய் வழி உதவி.

விருச்சிகம்:- தாய்வழிப் பகை, எதிலும் வெறுப்பு, நண்பர் விரோதம்.

தனுசு:- மதிப்பு உயரல், நற்காரிய விருப்பு, சுபச்செலவு.

மகரம்:- வரவுக்கு மிஞ்சிய செலவு, மனக்குழப்பம், நண்பர் விரோதம்.

கும்பம் :- ஆரோக்கிய விருத்தி, அயலவர் உதவி, கௌரவம் உயர்வு.

மீனம்:- எதிலும் வெற்றி, பணவரவு, நண்பர்களுடன் கொண்டாட்டம்.

## தூய்மையாக வைத்திராத காணி உரிமையாளர்கள்மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் பராமரிக்கப்படாமல் உள்ள பற்றைக் காணிகளின் உரிமையாளர்கள் பற்றைகளை வெட்டித் தூய்மையாக வைத்திருக்கும்படி நல்லூர்ப பிரதேச சபைச் செயலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பற்றைகளை வெட்டித் தூய்மையாக வைத்திருக்கத் தவறும் காணி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டி வரும் என்பதை அறியத் தருவதுடன், பற்றைக் காணிகளாகப் பாராமரிக்கப்படாமல் இருப்பதை இனங்கண்டு, அவற்றின் விபரங்களை அறியத்தருமாறும் அவர் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நிவாரணம் வழங்கவில்லை பயனாளிகள் கவலை

(ஊர்காவற்றுறை)

கடந்த வருடம் ஓகஸ்ட்மாதம் இலகு வேலை செய்தவர்களுக்கான நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாங்கள் செய்த இலகு வேலைக்கான நிவாரணத்தை சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து பெற்றுத்தருமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின் றனர்.


இலகு வேலைக்கான உலக உணவுத் திட்டம் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (14)




வாதரவத்தை ஸ்ரீவிக்னேஸ்வரா பாடசாலைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட லயன் மாவட்ட ஆளுநர் எஸ்.ஜெய வத்சலன் பாடசாலை மாணவிக்குக் கற்றல் உபகரணம் வழங்குவதையும், கழகததின் மாவட்ட சுகாதார இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா பாடசாலை வளாகத்தில் மரம் நாட்டி வைப்பதையும் காணலாம். (08)

## புலிகளின் தளபதிகள் படுகொலை

# விஜய்நம்பியாருக்கு எதிராக குற்றவியல் நீதிமன்றில் வழக்கு



(கொழும்பு)

நெதர்லாந்தில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின் தலைமைச் செயலாளர் விஜய் நம்பியாரை ஒரு போர்க் குற்றவாளி என தண்டிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இலங்கை யுத்தத்தின் இறுதி நாட்களின்போது அரச படையினரிடம் சரண் அடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டமையில் ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித ஹோகன மாத்திரம் அன்றி நம்பியாரும் சம்பந்தப்பட்டு இருக்கின்றார் என்று மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

புலிகள் இயக்க தலைவர்களை அரச படையினரிடம் சரண் அடைய வைக்கின்றமையில் பாலித மாத்திரம் அன்றி நம்பியாரும் முழுமூச்சாகச் செயற்பட்டு இருந்தார் என்றும் சரண் அடை கின்ற புலிகளுக்கு படையினரால் ஆபத்து நேராது என்று இவர்களால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தை நம்பியே 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி புலித்தலைவர்கள் சரண் அடைந்தனர் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆட்கடத்தலுக்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது

## கனடா பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அகதிகள் சென்ற எம் வி ஏசியன் லேடி கப்பலை கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு 76 இலங்கை அகதிகளுடன் சென்ற கப்பலே எம் வி ஏசியன் லேடி என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா குடிவரவு - குடியகல்வு 49 இலக்கச் சட்டமூலம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தச் சென்ற வேளையிலேயே பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் குறித்த கப்பலைப் பார்வையிட்டுள்ளார்.



இதன்போது, ஆட்கடத்தலுக்கு ஒருபோதும் இடமளிக்கப்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், குடிவரவு குடியகல்வு சட்டத்துக்கு எதிராக ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# சஜித் எம்.பி மீது விசாரணை வேண்டும்


(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்ட ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தனது ஆதரவாளர்களுக்கு வழங்குவதற்கான நிதி எங்கிருந்து கிடைத்தது, எவ்வளவு கிடைத்தது என விசாரிக்க வேண்டும் என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சஜித் எம்.பி.சில குடும்பங்களுக்கு 5000ரூபா வரை வழங்கியிருப்பதாகவும் அமைச்சர் நிமல் தெரிவித்துள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# உலகின் மோசமான தலைநகரம் கொழும்பு பிரித்தானிய சஞ்சிகையின் கணிப்பு இது!




(கொழும்பு)

உலகில் மிக மோசமான நிலையில் உள்ள பத்து தலைநகரங்களில் கொழும்பும் ஒன்று என்று பிரித்தானிய தலைநகர் லண்டனில் இருந்து வெளியாகின்ற The Economist சஞ்சிகை தெரிவித்து உள்ளது.

இச்சஞ்சிகை சுகாதாரம், கலாசாரம், சுற்றாடல், கல்வி, தனி நபர் பாதுகாப்பு ஆகியன உட்பட 30 அம்சங்களின் அடிப்படையில் மிகவும் சிறந்த பத்து தலைநகரங்களையும், மிகவும் மோசமான நிலையில் உள்ள பத்து தலைநகரங்களையும் தெரிவு செய்து வைத்துள்ளது.

மிக மோசமான நிலையில் உள்ள 10 தலைநகரங்களுக்குள்ளும் மிகவும் கேவலமான நிலையில் இலங்கை உள்ளது என்கிறது இச்சஞ்சிகை.

மிகவும் மோசமான நிலையில் உள்ள தலைநகரங்கள் என்று இச்சஞ்சிகையால் அடையாளம் காணப்பட்டு இருப்பவை வருமாறு:-

01) Harare - Zimbabwe
02) Dhaka - Bangladesh
03) Port Moresby - Papua New Guinea
04) Lagos - Nigeria
05) Algiers - Algeria
06) Karachi - Pakistan
07) Douala - Cameroon
08) Tehran - Iran
09) Dakar - Senegal
10) Colombo - Sri Lanka.

என அச்சஞ்சிகையில் கணிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேசிய பாடசாலைகளில் இன்னமும் அதிபர்கள் வெற்றிடமுள்ளது

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள 105 தேசிய பாடசாலைகளில் அதிபர்களுக்கான பதவி வெற்றிடங்கள் இருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பதவி வெற்றிடங்களை மீள் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள், எதிர்வரும் மார்ச் மாதம் வர்த்தமானியில் அறிவிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இதற்கிடையில் கல்வி அமைச்சில் உள்ள விசாரணை பிரிவை சக்திமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குருகொட ஓயாவில் சிசுவின் சடலம் மீட்பு

(கொழும்பு)

பிறந்து எட்டு நாள்களேயான சிசுவொன்றின் சடலம் மொரன் தோட்டவிலுள்ள குருகொட ஓயாவிலிருந்து நேற்று செவ்வாய்க் கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

குருகொட ஓயாவில் குறித்த சிசுவின் சடலம் மிதந்து கொண்டிருந்ததைக் கண்ட அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக்கு இன்று வருகிறார் பங்களாதேஷ் இராணுவத் தளபதி

(கொழும்பு)

5 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பங்களாதேஷின் இராணுவத் தளபதி இன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரியவருகிறது.

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரியவின் அழைப்பிற்கமைய பங்களாதேஷ் இராணுவத் தளபதி ஜெனரல் அப்துல் முபீன் இலங்கை வருகிறார்.

பங்களாதேஷ் இராணுவத் தளபதி தனது இலங்கை விஜயத்தின் போது பிரதமர் டி.மு.ஜயரட்ன, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரீஸ் உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.



பங்களாதேஷ் இராணுவத் தளபதியை வரவேற்கவென 24ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை பல்கலைக் கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குகிறது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கையின் பல்கலைக் கழக மாணவர்களுக்கு English First- English Town என்கிற தொலைக்கல்வித் திட்டத்தின் கீழ் 10200 புலமைப் பரிசில்களை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்கத்தில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினிசிற்கும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இது சம்பந்தமாகக் கைச்சாத்திடப்படுகின்றது.

அங்கீகாரம் பெற்ற அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றால் வகுப்புக்கள் நடத்தப்படும். இத்தொலைக் கல்விச் சேவையை வழங்குவதற்காக 50 இற்கும் அதிகமான நாடுகளில் மொத்தமாக 400 கிளைகளை மேற்படி பல்கலைக் கழகம் கொண்டுள்ளது.

அத்துடன் 34,000 அலுவலர்கள் கடமை புரிகின்றனர்.

# பிரித்தானிய தூதரகத்தின் இணையத்தளம் தமிழ்மொழியில்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை இனிமேல் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளிலும் பார்வையிட முடியும்.

இந்த இணையத்தளத்தை ஆங்கிலத்தில்தான் இது வரை பார்வையிட முடிந்தது. இலங்கைக்கு இரு நாட்கள் கொண்ட உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருக்கும் பிரிட்டன் அமைச்சர் Alistair Burt MP இந்த இணையத் தளத்தின் தமிழ் , சிங்கள வடிவத்தை நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

தூதரகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. தூதரகத்தின் சேவைகளை இலங்கையர்கள் தாய்மொழியில் வாசித்துத் தெரிந்து கொள்ளவே இப்புதிய ஏற்பாடு. UkInSrilanka

என்கிற இணைப்பு மூலமாக இணையத்தை தமிழில் பார்வையிட முடியும்.

## ரயில் விபத்துக்களைத் தடுக்க

# மிதிபலகையில் நின்று பயணிக்க வேண்டாம்

(கொழும்பு)

மிதிபலகையில் நின்று பயணிக்க வேண்டாம் எனவும் அது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் பொது மக்களிடம் ரயில்வே திணைக்களம் கோரிக்கைவிடுத்துள்ளது.

அண்மைக்காலங்களில் சிறுவர், இளைஞர்கள் உட்பட பலர் இவ்வாறு மிதிபலகையில் நின்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக ரயில்வே செயற்திட்ட அதிகாரி விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி அலவத்துபிட்டி பிரதேச புகையிரத நிலைய மேடையுடன் மோதி ஒருவர் உயிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஒருங்கிணைந்து ஆடுங்கள்



(புதுடில்லி)

ஒருங்கிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினால், எந்த ஒரு அணியையும் இந்திய அணியால் வீழ்த்த முடியும் என ரவி சாஸ்திரி தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியதாவது.

தற்போதுள்ள இந்திய அணி சிறப்பாக உள்ளது. தனது இரண்டாவது போட்டியில் இந்திய அணி, இங்கிலாந்தை வீழ்த்தும் பட்சத்தில், காலிறுதி வாய்ப்பை அநேகமாக உறுதி செய்து விடலாம். அதன்பின், எவ்வித நெருக்கடியும் இல்லாமல் விளையாடலாம். எனவே, இந்த போட்டி இந்திய அணிக்கு மிகவும் முக்கியமானது என்றார்.

# இனித்தான் உண்மையான சவால்

(கொழும்பு)

கனடா அணியை எளிதாக வீழ்த்தினாலும் உண்மையான சவால் பாகிஸ்தானுக்கு எதிராகத்தான் தொடங்குகிறது. இதனால் வீரர்கள் கவனமாக இருக்க வேண்டும் என இலங்கை வீரர் ஜெயவர்தன எச்சரித்துள்ளார்.




இது குறித்து அவர் மேலும் கூறியது: உலக கிண்ண தொடரின் முதல் போட்டியை நமது சொந்த மண்ணில் ரசிகர்களுக்கு முன்பாக தொடங்கியது மகிழ்ச்சிதான். இதனால் கனடா அணிக்கு எதிரான போட்டியில் முதலில் சற்று நெருக்கடி இருந்தது. ஏனெனில் தொடரின் முதல் போட்டி என்பதால் வெற்றி பெற வேண்டிய கட்டாயம் இருந்தது. இதனால் கனடா அணியை எளிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

இதில் வெற்றி பெற்ற போதும் அடுத்து வரும் மற்ற அணிகளுக்கு எதிரான போட்டியில் கடுமையாகப் போராட வேண்டியது இருக்கும். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி மிகவும் முக்கியம். ஏனெனில் அந்த அணியில் தனிப்பட்ட முறையில் சிறப்பாக விளையாடக் கூடிய வீரர்கள் பலர் உள்ளனர். அவர்கள் எவ்வளவு அபாயகரமானவர்கள் என்று தெரியும். எனவே அவர்களை எதிர்கொள்ள சரியான திட்டமிடல், நல்ல மனநிலை வேண்டும்.

இந்த போட்டிக்காக நமக்கு சாதகமான ஆடுகளம் தேவை. அதேநேரம் அதிக திருப்பம் ஏற்படக்கூடாது என்றார்.

## கோபமடைந்த பொண்டிங்




(அஹமதாபாத்)

சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான போட்டியில் 28 ஓட்டங்களுடன் ரன் அவுட் மூலம் ஆட்டமிழந்து வெளியேறிய பொண்டிங், கோபமடைந்து ஓய்வறையில் இருந்த எல்.சி.டி தொலைக்காட்சி ஒன்றை உடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், மைக்கல் கிளார்க் அடித்த பந்துக்கு இரண்டு ஓட்டங்களைப் பெற முற்பட்டபோது சிம்பாப்வே அணியின் வீரர் மபோ பூ பந்தை நேரடியாக விகெட்டுக்கு அடித்தார். இதனால் ஆட்டமிழந்த பொண்டிங் கோபத்துடன் வெளியேறி ஓய்வறையில் இருந்த தொலைக்காட்சியை உடைத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

# மறைந்த பயிற்றுநருக்காகவும் கிண்ணத்தை வெல்லவேண்டும்

(கராச்சி)




பாகிஸ்தான் வீரர்கள், நாட்டுக்காக மட்டுமல்லாமல், மறைந்த முன்னாள் பயிற்சியாளர் பொப் உல்மருக்காகவும் உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என, பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இன்சமாம் உல் ஹக் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: இம்முறை அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணி, உலகக் கிண்ணத்தை வெல்ல முழுவீச்சில் போராட வேண்டும். இதனை நாட்டுக்காக மட்டுமின்றி, மறைந்த முன்னாள் பயிற்சியாளர் பொப் உல்மருக்காகச் சமர்ப்பிக்க வேண்டும்.

இம்முறை, பாகிஸ்தான் தவிர, வேறு எந்த ஒரு அணியிலும் நான்கு திறமையான சுழற்பந்துவீச்சாளர்கள் இடம் பெறவில்லை. இந்திய துணைக் கண்டத்தில் உள்ள மைதானங்கள் சுழலுக்கு சாதகமாக அமையும் என்பதால், நடுவரிசையில் விக்கெட் வேட்டை நடத்த வாய்ப்பு உள்ளது.

எனவே துடுப்பாட்டம், பந்துவீச்சு என அனைத்திலும் சிறந்த வீரர்கள் இடம் பெற்றிருப்பதால், இம்முறை பாகிஸ்தான் அணி கிண்ணத்தை வென்று சாதிக்கும் என நம்புகிறேன் என்றார்.

# நம்பிக்கை அளித்துள்ளது

(நாக்பூர்)



பாகிஸ்தான் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் கிடைத்த வெற்றி, உலகக் கிண்ணத் தொடரில் சாதிப்போம் என்ற நம்பிக்கை அளித்துள்ளது என இங்கிலாந்து அணியின் தலைவர் ஸ்ரோஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது: கடந்த ஆறு நாட்களாக பங்களாதேஷ் மண்ணில் சிறந்த பயிற்சி மேற்கொண்டோம். இதன்மூலம் கனடா, பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் வெற்றி பெற முடிந்தது. இதில் பாகிஸ்தானை வீழ்த்தியதன்மூலம், உலகக் கிண்ணத் தொடரில் சாதிப்போம் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளது.

எங்கள் பிரிவில் இடம் பெற்றுள்ள அயர்லாந்து, நெதர்லாந்து உள்ளிட்ட அணிகளைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. முன்னணி அணிகளுக்கு அதிர்ச்சி அளிக்கும் தகுதி இவர்களிடம் உள்ளது.

எனவே ஒவ்வொரு போட்டியிலும் முழுத்திறமையையும் வெளிப்படுத்தி வெற்றி பெறப் போராட வேண்டும். அப்போதுதான் முதல் சுற்றில் பலம் வாய்ந்த அணிகளை எளிதாக வீழ்த்த முடியும் என்றார்.

ICC Cricket World Cup 2011

### இன்றைய ஆட்டம்

**பாகிஸ்தான் எதிர் கென்யா**

மைதானம் : அம்பாந்தோட்டை.

பகலிரவு ஆட்டம்

## போராடி வென்றது இங்கிலாந்து


(நாக்பூர்)

நெதர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் இங்கிலாந்து அணி போராடி வெற்றிபெற்றது.

நாக்பூர் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டி பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணி, 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய இங்கிலாந்து அணி 48. 4 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக நெதர்லாந்து அணியின் ரென் டுஷாட் தெரிவானார்.



## தினமுரசு இங்கிலாந்து எதிர் நெதர்லாந்து

## SCORE CARD

மைதானம் : நாக்பூர் திகதி : 22-02-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி நெதர்லாந்து : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) கேர்வீஸ் | c பிறியர் b பிரெஸ்னன் | 16 |
| 02) பர்ரேஷி | st பிறியர் b ஸ்வான் | 29 |
| 03) கூப்பர் | c அண்டர்சன் b கொலிங்வூட் | 49 |
| 04) ரென் டுஷாட் | c போபாரா b பிறோட் | 119 |
| 05) ஷிடிறென்ற் | c கொலிங்வூட b ஸ்வான் | 01 |
| 06) குறாத் | b பிறோட் | 28 |
| 07) பி.டபிள்யூ பொறேன் | not out | 35 |
| 08) முட்டாஸர் புக்காரி | not out | 06 |
| 09) பி.எம். சீலார் | | |
| 10) லூாட்ஸ் | | |
| 11) வெஸ்ட்ஜிக் | | |
| உதிரிகள் | (b 3, lb 3, w 2, nb3) | 12 |
| மொத்தம் | (6 W : 50 ஓவர்கள்) | 292 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஸ்ரோஸ் | c கூப்பர் b முட்டாஸர் புக்காரி | 88 |
| 02) கெவின் பீற்றர்சன் | c பொறேன் b சீலார் | 39 |
| 03) ரொட் | st பர்ரேஷி b ரென் டுஷாட் | 62 |
| 04) இயன் பெல் | b ரென் டுஷாட் | 33 |
| 05) கொலிங்வூட் | not out | 30 |
| 06) போபாரா | not out | 30 |
| 07) பிறியர் | | |
| 08) பிரெஸ்னன் | | |
| 09) பிறோட் | | |
| 10) ஸ்வான் | | |
| 11) அண்டர்சன் | | |
| உதிரிகள் | (b 1, lb 2, w 11) | 14 |
| மொத்தம் | (4 W; 48.4 ஓவர்கள்) | 296 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| அண்டர்சன் | 10 | 72 | 00 |
| பிறோட் | 10 | 65 | 02 |
| பிரெஸ்னன் | 10 | 49 | 01 |
| ஸ்வான் | 10 | 35 | 02 |
| கொலிங்வூட் | 08 | 46 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| முட்டாஸர் புக்காரி | 09 | 54 | 01 |
| வெஸ்ட்ஜிக் | 07 | 41 | 00 |
| லூாட்ஸ் | 9.4 | 74 | 00 |
| சீலார் | 10 | 54 | 01 |
| ரென் டுஷாட் | 04 | 47 | 02 |

**6 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணி வெற்றி. ஆட்டநாயகன் : ரென் டுஷாட்**




# நியூசிலாந்தில் திடீர் நிலநடுக்கம்; கட்டடங்கள் இடிந்ததில் 65 பேர் பலி




(கிறிஸ்சர்ச்)

நியூசிலாந்து நாட்டின் தெற்கு பகுதியில் கிறிஸ்சர்ச் நகர் உள்ளது. நியூசிலாந்து நேரப்படி நேற்று மதியம் 12.51 மணிக்கு கிறிஸ்சர்ச் நகரில் திடீர் என்று நில நடுக்கம் ஏற்பட்டது.

இதனால் கட்டடங்கள் அதிர்ந்தன. பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இதில் ஏராளமானோர் இறந்து இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. நில நடுக்கத்தின் போது வீடு மற்றும் அலுவலகங்களில் இருந்த ஆயிரக்கணக்கானோர் அலறியடித்துக் கொண்டு தெருவுக்கு ஓடினார்கள். நில நடுக்கம் ரிக்டர் அளவில் 6.3 என்று பதிவாகி உள்ளது.

பூமிக்கு அடியில் 4 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. நியூசிலாந்து பிரதமர் ஜான்கி, நில நடுக்கத்தால் 65 பேர் உயிர் இழந்தனர் என்று தெரிவித்தார்.

கிறிஸ் சர்ச் நகர மேயர், அங்கு அவசர நிலை பிரகடனம் செய்துள்ளார். இது நகரத்தின் கறுப்பு தினம் என்றும் அறிவித்துள்ளார்.

இடிந்த கட்டடங்களின் இடிபாடுகளிக்கிடையே ஏராளமான பொதுமக்கள் சிக்கி இருக்கிறார்கள். சாலைகளிலும், தெருக்களிலும் விரிசல்கள் காணப்படுகின்றன. இடிபாடுகளுக்குள் சிக்கியவர்கள் தங்களை காப்பாற்றும்படி அபயக்குரல் எழுப்பிய படி உள்ளனர்.

தகவல் அறிந்ததும் தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் சம்பவ இடம் விரைந்தனர். என்றாலும் கட்டட இடிபாடுகள் காரணமாக தெருவில் விரைவாக செல்ல முடியவில்லை. எனவே, மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக கிறிஸ்சர்ச் நகர விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. காயம் அடைந்தவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்காக ஆஸ்பத்திரிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. நகரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

டெலிபோன் தொடர்புகளும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. குடிநீர் இணைப்பு குழாய்களும் உடைந்தன. நகரம் முழுவதும் சேதம் அடைந்து காணப்படுகிறது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நிலநடுக்கத்துக்கு பயந்து வீடுகளில் இருந்து வெளியேறி தெருக்களில் தங்கி இருக்கிறார்கள்.

கட்டட இடிபாடுகளில் காயம் அடைந்தவர்கள் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். சாவு எண்ணிக்கை, சேத மதிப்பு பற்றிய விவரங்கள் உடனடியாக தெரியவில்லை.

# ஆப்கானில் அரசு அலுவலகத்தில் தற்கொலை தாக்குதல்; 30 பேர் பலி

(காபூல்)

வடக்கு ஆப்கானிஸ்தான் மாகாணத்தில் குண்டூஷ் மாவட்டத்தில் இமாம் சாகிப் நகரம் உள்ளது. இங்குள்ள அரசு அலுவலகத்தில் அடையாள அட்டை பெறுவதற்காக ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

இந்த அலுவலகத்தின் நுழைவு வாயிலில் வந்த தற்கொலைத் தீவிரவாதி உடலில் தான் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தாா. அது பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதில், அங்கு கூடியிருந்த பொது மக்கள் 30 பேர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தனர். 40 பேர் காயமடைந்தனர்.

அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

# தேர்தலில் போட்டியில்லை; சூடான் அதிபர் திடீர் முடிவு

(கார்ட்டூம்)

சூடான் அதிபர் ஓமர் அல் பஷீர், அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்துள்ளார். எகிப்து எழுச்சியை தொடர்ந்து வட ஆப்ரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளில் அரசுகளுக்கு எதிரான போராட்டம் தீவிரம் அடைந்து வருகிறது.

இதன் எதிரொலி சமீபத்தில் சூடானிலும் கேட்டது. அங்கு மாணவர்கள் தங்கள் குறைகளைத் தீர்க்காத அரசுக்கு எதிராக திரண்டு எழுந்தனர். பின்பு அடக்கப்பட்டனர்.

இந்நிலையில், சூடான் அதிபர் ஓமர் அல் பஷீரின், தேசிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ரபீ அப்தலாடி நேற்று அளித்த பேட்டியில், அதிபர் தேர்தலில் அடுத்த முறை, தான் நிற்கப் போவதில்லை என ஏற்கனவே பஷீர் தெரிவித்து விட்டார். அவரது பதவிக் காலம் இன்னும் நான்காண்டுகள் இருக்கிறது. இந்தப் பிராந்தியத்தில் நடந்து வரும் போராட்டங்களால் அவர் இந்த முடிவுக்கு வரவில்லை என்றார்.

# எகிப்தில் பிறந்த குழந்தைக்கு பெயர் "பேஸ்புக்"

எகிப்தில் பிறந்த குழந்தைக்கு பேஸ்புக் பெயரைச் சூட்டி அதற்கு பெருமை சேர்த்துள்ளனர் எகிப்திய தம்பதியினர். எகிப்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஹோஸ்னி முபாரக் அதிபராக பதவி வகித்து வந்தார்.

இவரது ஆட்சியில் ஊழல்கள், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளதாக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். நாட்டில் நிகழும் நிகழ்ச்சியை மற்றவர்கள் தெரிந்து கொள்வதைத் தடை செய்யும் பொருட்டு, எல்லா தொலைத்தொடர்பு சேவையையும் எகிப்து அரசு தடை செய்தது.


இந்நிலையில், பேஸ்புக் மட்டும் அந்த நாட்டு மக்களுக்கு பேருதவி செய்தது. இதனையடுத்து, 18 நாட்கள் கிளர்ச்சிக்குப் பிறகு, ஹோஸ்னி முபாரக்கின் கட்டுப்பாட்டிலிருந்து எகிப்து விடுதலை பெற்றது. இந்த மக்கள் வெற்றிக்கு பேஸ்புக் பெரும் பங்காற்றியது. இந்நிலையில், பேஸ்புக்கை கௌரவிக்கும் வகையில், எகிப்தில் பிறந்த குழந்தைக்கு பேஸ்புக் என்று எகிப்து தம்பதியினர் பெயர் வைத்துள்ளனர்.

# பிரபாகரனின் தாயாரின் இறுதி யாத்திரை...



அஞ்சலிக்காக திரண்ட மக்கள்





இரத்த உறவுகளின் வாய்க்கரிசி



புகழுடலைத் தாங்கும் கரங்கள்



சிதை மீது பள்ளிகொண்டபோது

| | |
|---|---|
| பூர்வீகம்:- | வல்வெட்டித்துறை<br>பழம்பெரும் கிராமம்<br>(வெல்வெட் - துறை) |
| பிறப்பு:- | 07.08.1931 |
| ஆரம்பக்கல்வி:- | யா/வல்வெட்டித்துறை<br>சிவகுரு வித்தியாசாலை |
| திருமணம்:- | 1947 |
| வாழ்வு:- | குருநாகல், அநுராதபுரம்,<br>மட்டக்களப்பு,<br>வல்வெட்டித்துறை. |
| குழந்தைகள்:- | 04 பிள்ளைகள்<br>02 ஆண்கள்<br>02 பெண்கள் |
| பிரிவு:- | 19.02.2011<br>வல்வெட்டித்துறை. |




காடு வரை மக்கள்



அக்கினியுடன் சங்கமம்

# சர்வதேச கடல் எல்லைகளை ஒருமாத காலத்திற்கு கடக்காதிருக்க தமிழக மீனவர்கள் தீர்மானம்!



(புதுடெல்லி)

***சர்வதேச கடல் எல்லையை எதிர்வரும் ஒரு மாத காலத்துக்குக் கடக்காதிருக்க தமிழக மீனவர்கள் தீர்மானித்துள்ளதாக 'த டைம்ஸ் ஒப் இந்தியா' தெரிவித்துள்ளது.***

படகு உரிமையாளர்கள் மற்றும் மீனவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர்கள் தற்போது ஏற்படுகின்ற கடுமையான காற்றுக் காரணமாக பலவந்தமாக இலங்கை கடற்பரப்புக்கு அடித்துச் செல்லப்படலாம் என்பதனால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட முடியாது என ஒருவராலும் தடை விதிக்க முடியாது என சிலர் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், தாம் இலங்கை மீனவர்களின் நலனைப் பாதிக்கும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது என்பதை ஏற்றுக் கொள்வதாக, தமிழக மீனவர் ஒன்றியத்தின் தலைவர் ஆர்.எம்.பி.ராஜேந்திர நாடார் தெரிவித்துள்ளார்.

# தெலுங்கானா போராட்டம் தீவிரமடைகிறது

(நகரி)

ஆந்திராவைப் பிரித்து தனி மாநிலம் அமைக்கக் கோரி தெலுங்கானா கூட்டுப் போராட்ட குழு கடந்த சில ஆண்டுகளாகப் போராடி வருகிறது. தனி மாநில போராட்டம் கடந்த ஒரு மாதமாக அமைதியான முறையில் நடந்தது. தற்போது மீண்டும் தீவிரம் அடையத் தொடங்கி இருக்கிறது.

தெலுங்கானா மாணவர்கள் நேற்று முன்தினம் ஆந்திர சட்ட சபையை முற்றுகையிடுவோம் என்று அறிவித்தனர். இதையடுத்து ஐதராபாத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. ஆனால் இதையும் மீறி மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். ஜாமல், எம்.எம்.டி.ஏ. ஆகிய ரயில் நிலையங்களில் புகுந்து அலுவலக கண்ணாடிகள், மற்றும் கணனிகளை அடித்து நொறுக்கினார்கள்.




மின் விளக்குகளும் அடித்து உடைக்கப்பட்டன.

ராம்நகர், ஹப்பி கூடா பகுதிகளில் 8 பஸ்களை எரித்தனர். 9 பஸ்களின் கண்ணாடிகளை உடைத்தனர். பொலிஸ் வேன், ஜீப்புக்கும் தீ வைத்தனர். கலவரத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினார்கள். ரப்பர் குண்டுகளாலும் சுட்டனர்.

இதையடுத்து மாணவர்கள் சிதறி ஓடினார்கள். உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள் வெளியே வருவதைத் தடுக்க நுழைவாயில்களில் மத்திய பொலிஸ் படை குவிக்கப்பட்டுள்ளது.

# உஜி ஊழல் தொடர்பாக ஜே.பி.சி விசாரணை

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணை நடத்தும் என பிரதமர் மன்மோகன்சிங் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

ஜே.பி.சி. அமைக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியதால் நாடாளுமன்றத்தின் குளிர் கால கூட்டத் தொடர் முற்றிலுமாக முடங்கிப் போனது: இந்த நிலையில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியதன் அடிப்படையில் 2-ஜி ஸ்பெக்ட்ரம் தொடர்பாக விசாரிக்க ஜே.பி.சி. அமைக்க அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

# வெளிநாட்டில் உள்ள கறுப்புப்பணத்தை இந்தியாவுக்கு மீட்டுக்கொண்டுவருவோம்

## இந்திய ஜனாதிபதி உறுதி

(சென்னை)

வெளிநாட்டில் உள்ள கறுப்புப் பணத்தை இந்தியாவுக்கு மீட்டுக் கொண்டு வருவோம், கறுப்புப் பணக்காரர்களிடம் இருந்து இதுவரை ரூபா 34,601 கோடி வரி கூடுதலாக வசூல் செய்யப்பட்டு இருப்பதாக ஜனாதிபதி பிரதீபா பட்டீல் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப் பணம் போடப்பட்டுள்ள விவகாரம், நாடு முழுவதும் கவனத்தை ஈர்த்துள்ளது. சட்ட ரீதியாகவோ, சட்டவிரோதமான வழிகளிலோ திரட்டப்பட்ட கறுப்புப் பணம் குறித்த கவலையை மத்திய அரசு பகிர்ந்து கொள்கிறது. கறுப்புப் பணத்தை இந்தியாவுக்கு மீட்டு வருவதுடன், குற்றவாளிகளை சட்டத்தின் முன்பு நிறுத்துவதில் எந்த வாய்ப்பையும் எனது அரசு தவறவிடாது. இதற்கு மாநில அரசுகளின் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டு வருவதில், ஜி-20 அமைப்பு மூலமாக உலக நாடுகளுடன் மத்திய அரசு தொடர்பு கொண்டுள்ளது. தகவல்களைப் பகிர்ந்து கொள்ள ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.



கறுப்புப் பணக்காரர்களிடமிருந்து கூடுதலாக ரூ 34,601 கோடி வரி வசூலிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக ரூபா 48, 784 கோடி வருமானம் கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011

### தினமொரு தகவல்

ICC Cricket World Cup 2011

# மலையாக்காமல் இருக்க...

எத்தனை அணிகளை 2015 உலகக் கிண்ணப் போட்டிகளில் அனுமதிப்பது என்ற சர்ச்சை இப்பொழுதே கிளம்பியுள்ள நிலையில் அதுவும் இங்கிலாந்து பயிற்றுநர் அன்டி பிளவர் அணிகளின் எண்ணிக்கையைப் பத்தாகக் குறைக்கக் கூடாது என்று கடுந்தொனியில் கூறியுள்ள நிலையில் தொடர்ந்து சுமையான செய்தியொன்றும் வெளிவந்துள்ளது.

நெதர்லாந்து அணியின் இறுதிப் பதினைந்து வீரர்களின் பெயர்ப்பட்டியல் ஒரு மாதத்திற்கு முன்பே ஐ.சி.சி. யிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாம். காரணம் அனேகமான வீரர்கள் போட்டிகளில் பங்குகொள்ள தாங்கள் வேலை செய்யும் நிறுவனங்களில் லீவு பெற்றுக் கொள்ள வேண்டுமாம். பெரன்ட் வெஸ்டிக் உணவகம் ஒன்றின் மேற்பார்வையாளராம். பீற்றர் சீலர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி மாணவராம். வேகப்பந்து வீச்சாளர் முதஸார் புகாரி துரித உணவகத்தில் வேலை செய்பவராம். இவர்கள் எல் லோரும் தற்போது 'லீவு' பெற்று உலகத் திருவிழாவில் கிண்ணம் வெல்லப் போட்டியிடுகிறார்களாம். இப்பொழுதுள்ள கேள்வி உலகத் திருவிழாவிற்காக இவர்கள் எந்தளவில் பயிற்சி மேற்கொண்டிருப்பார்கள் என்பதுதான்.

சிறிய நாடுகள் ஒதுக்கப்பட்டுவிடும் என்று சுமைகளைக் குறைக்கக்கூடாதென்று கூறுபவர்கள் இப்படியான விடயங்களுக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்கள்.

இது ஒரு புறம் இருக்க, ஊக்கமருந்து பாவனை தொடர்பில் எறுமாறாக வீரர்களைத் தெரிவு செய்து பரிசோதிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால், பாகிஸ்தான் அணியின் அக்தரும் கம்ரான் அக்மலும் முதல் தடவையே தெரிவாக அது பாகிஸ்தான் அணிக்குச் சிறிது சங்கடமாகிப் போய் விட்டது. ஏனெனில் பாகிஸ்தான் அணியை எல்லோரும் மஞ் சள் காமாலைக் கண்ணுடன் பார்க்கும் துரதிர்ஷ்ட நிலைமையல்லவா இப்பொழுது இருக்கிறது. எல்லா அணிகளிலும் RANDOM ஆக வீரர்கள் பரிசோதிக்கப்படுவார்கள். இது ஆரம்பம் தான் என்று ஐ.சி.சி. கூறியிருக்கிறது. அது எப்படியோ, அந்த முதல் வீரர்கள் ஏன் இங்கிலாந்து, நியூசிலாந்து அவுஸ்ரேலிய வீரர்களாக இருக்கவில்லை. எங்கேயோ இடறுவது போலப் படுகிறது அல்லவா. பாகிஸ்தான் வீரர்கள் முதலில் தெரிவு செய்யப்பட்டதும் அப்படித்தான் இருக்குமோ? என்று ரசிகர்கள் நினைத்ததும் நன்றாகவே இல்லை. எல்லாவற்றிலும் வேறு ஏதும் இருக்குமோ என்றும் ஆராய்ந்தால் கடுகை மலையாக்காமல் இருக்கலாம்.




10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுபப்வேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

போட்டி இல.7

அனுப்ப வேண்டிய முகவரி:-

தினமுரசு விளையாட்டு அரங்கு, இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ICC Cricket World Cup 2011

தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.

1) 25ஆம் திகதி நடைபெறவுள்ள அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லும் அணி ஏது?

2) 25ஆம் திகதி நடைபெறவுள்ள பங்களாதேஷ்-அயர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லும் அணி எது?

பெயர்: ..........

முகவரி : ..........

போ.இல : ..........

விடைகள் : 01) ..........

02) ..........

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம் 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப் பணிமனை M.P.C.S. பில்டிங் 127, கே.கே.எஸ்.வீதி, யாழ்.

விடைகளை 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள்.

# உள்ளூராட்சித் தேர்தல் பிற்போட்டமைக்கு பின்னணியில் அரசாங்கம் இருக்கிறது

## குற்றம் சுமத்துகிறது ஐ.தே.க

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டதன் பின்னணியில் அரசாங்கம் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இக்குற்றச் சாட்டினை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

60 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தலை பிற்போட்டமையின் பின்னணியில் அரசாங்கம் இருப்பதாக நாங்கள் குற்றம் சுமத்துகின்றோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிரித்து பிரித்து வைக்கவே அரசாங்கம் முயற்சிக்கிறது.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிரித்துப் பிரித்து வைக்க வேண்டாம் என ஐக்கிய தேசிய கட்சி என்ற வகையில் நாங்கள் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம். அதே போன்று தேர்தலைப் பிரித்து வைப்பதற்கு எங்களுடைய எதிர்ப்பையும் தெரிவிக்கிறோம்.


தேர்தல் பிற்போடப்படுகின்றமை தொடர்பில் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு அனுசரணை வழங்க வேண்டாம் எனத் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் கடந்த வாரம் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்தபோது தேர்தலை பிற்போட ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாதென அவர் எங்களிடம் உறுதியளித்தார்.

தேர்தல் ஆணையாருக்குப் பதிலாக நீதிமன்றில் சென்று உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு கோர சட்டமா அதிபருக்கு என்ன அதிகாரம் உள்ளது? என்று நாங்கள் கேட்கிறோம்.



அரசாங்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய செயற்படும் சந்தர்ப்பமாகவே இதனை நாம் பார்க்கிறோம். இந்தத் தேர்தல் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டம், தோல்வி, இயலாமை என்பவற்றை மூடி மறைக்கவும் மக்கள் நிலைப்பாட்டை திரிபுபடுத்துவதன் நோக்கமுமாகவே அரசாங்கம் இதன் பின்னணியில் இருக்கிறது என்றார் திஸ்ஸ.

# தமிழில் ஜனாதிபதியின் வாழ்க்கை வரலாறு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வாழ்க்கை வரலாறு தமிழில் நூல் வடிவம் பெற்றுள்ளது. தினகரன் பத்திரிகை ஆசிரியர் எஸ்.தில்லைநாதன் இப்புத்தகத்தை எழுதியுள்ளார்.

இந்நூல் "சரசவி'' புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலை அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் சம்பிரதாயபூர்வமாக நேற்றுமுன்தினம் கையளித்தார் நூலாசிரியர்.

இவ்வைபவத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், ஊடக அமைச்சுச் செயலாளர் டபிள்யூ.வி. கனெகல்ல, சிலோன் அஷோசியேட்டெட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் ஆசிரிய பீட பணிப்பாளர் சீலரத்தின செனரத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# விலை வாசி உயர்வுக்கு எதிராகப் போராட்டம்



(கொழும்பு)

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவைக் குறைக்குமாறு கோரி அரசாங்கத்திற்கு எதிரான முதலாவது ஆர்ப்பாட்டமொன்றை விலை வாசி உயர்வுக்கு எதிரான ஊழியர் ஒன்றியம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று செவ்வாய்க் கிழமை நண்பகல் நடத்தியது.

"பொருட்களின் விலை உயர்வடைந்து செல்கிறது. எங்களிடம் பணம் இல்லை'', "அரசாங்கம் மக்களுக்குப் பொய் சொல்கிறது" என்பது போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த விலைவாசி உயர்வுக்கு எதிரான ஊழியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரி.எச்.சோமரட்ன,

அரசாங்கம் தெரிவித்தவாறு அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை வழங்கவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வடைந்து செல்கின்ற நிலையில் மக்கள் வாழ்க்கைச் செலவை எதிர்கொள்ள முடியாது திண்டாடுகின்றனர்.

அரசாங்கம் விலைவாசியை குறைக்காதுவிட்டால், நாம் அரசாங்கம் பற்றிய முக்கிய தீர்மானமொன்றை எடுப்போம். அத்துடன், இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்" என்றார்.

# தேயிலைத் தொழிலாளர்கள் 4 நாட்களாக பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

பொகவந்தலாவ பொகவானை தேயிலைச் செய்கையாளர்கள் கடந்த நான்கு நாட்களாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேயிலைச் செய்கையாளர் ஒருவர் தோட்டத்தில் உதவி முகாமையாளரால் தாக்கப்பட்டமையை ஆட்சேபித்தே இந்தப் பணிப்புறக்கணிப்பு மேற கொள்ளப்பட்டுவருகிறது

குறித்த உதவி முகாமையாளரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்பதே தேயிலைச் செய்கையாளர்களின் கோரிக்கையாகும்.

இந்தநிலையில் சந்தேக நபரான தோட்ட உதவி முகாமையாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொட்டியாக்கலை தோட்ட தேயிலைச் செய்கையாளர்கள் நேற்று முன்தினம் முதல் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆண் தொழிலாளர்கள் தேயிலை பறிப்பில் ஈடுபடுத்தப்படுவதை ஆட்சேபித்தே இந்தப் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

எனினும் இது குறித்து விளக்கத்தைக் கோருவதற்காக கொட்டியாகல தோட்ட நிர்வாகத்தைத் தொடர்புகொண்ட போதும் அந்தத் தொடர்பு பலனளிக்கவில்லை.

# ஸ்வர்ணமாலி எம்.பியின் கணவர் பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)


நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமான உபேக்ஷா ஸ்வர்ணமாலியின் கணவர் மகேஷ சமிந்த வலவேகம நேற்று நுகேகொடை நீதிவான அனுர குமார ஹேரத்தினால் 2500 ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"பபா" என அழைக்கப்படும் நடிகை ஸ்வர்ணமாலி முகத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக சிறீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நடிகையை தாக்கியதாக கூறப்படும் அவரின் கணவர் மகேஷ் சமிந்த வலவேகம பொலிஸில் தேடப்பட்ட நிலையில் சரணடைந்து பின்னர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்விவகாரம் தொடர்பான வழக்கு இன்று நுகேர் கொடை நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது மகேஷ் சமிந்தவுக்கு பிணை வழங்குமாறு அவரின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர்கள் கோரினர். இப்பிரச்சினை கணவன் மனைவிக்கிடையிலானது எனவும் இவர்களின் குழந்தைத்தனமான நடத்தை காரணமானது எனவும் வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, இரு தரப்பினரும் இப்பிரச்சினையை தமக்கிடையில் தீர்த்துக் கொள்வதற்கு முயற்சிப்பதாக மீரிஹான பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை சந்தேக நபர் எதிர்காலத்தில் இவ்வாறான நடத்தைகளில் ஈடுபடக் கூடாது என எச்சரிக்குமாறும் பொலிஸார் கோரினர்.

அதையடுத்து நடிகைக்கு தீங்கு எதுவும் இழைக்கக் கூடாது என அவரின் கணவரை நீதிவான் எச்சரித்து பிணையில் செல்ல அனுமதித்தார். இது தொடர்பான வழக்கு விசாரணை மே '2. ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.




இணைய யுத்தம் குறித்து கருத்தரங்கொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது. இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜயசூரிய கருத்தரங்கில் உரையாற்றுவதையும் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.


## கட்டட வாடகைக்கான கேள்விக் கூறு கோரல்

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத்தொகுதியில் 1ஆம் மாடி வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. 3150 சதுர அடி விஸ்தீரனம் கொண்டதும் அறைகள், இணைந்த குளியலறை,மலசலகூடம்,மின்சாரம் நீர் விநியோக வசதிகள் கொண்ட பாரிய அலுவலகம் நடத்தக் கூடியதாக தள அமைப்பையும் கொண்டது.

கட்டடத்தைப் பார்வையிட்டு சபை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தையும் விபரங்களையும் பெற்று கூறுவிலையை 18-03-2011இற்கு முன்னதாக யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, வீரசிங்கம் கட்டடத்தொகுதி 2ஆம் மாடி, இல12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறது.

*செயலாளர்*
*யாழ்.மா.கூ.சபை*
*T.P- 021-2222324*

Email :- Jaffnadcc@gmail.com (C/473)

## தாயைத் தேடும் யுவதி

(கொழும்பு)

கொழும்பில் 20 வருடங்களுக்கு முன் பிறந்து நோர்வே நாட்டுத் தம்பதி ஒன்றுக்கு தத்துக் கொடுக்கப்பட்ட பெண்ணொருவர் இலங்கையரான சொந்த தாயைக் கண்டுபிடிக்கும் பகீரத முயற்சியில் இறங்கி உள்ளார்.

இவரின் பெயர் Anne Ida Ljunggren. வயது 20. 1991ஆம் ஆண்டு பிறந்தவர். நோர்வேக்கு கொண்டு செல்லப்பட்ட பின் சொந்தத் தாயுடன் இரண்டு வயது வரை கடிதங்கள் மூலம் தொடர்பு வைத்திருந்தார். பின் அத்தொடர்பும் அறுந்து விட்டது.

சொந்தத் தாயைக் கண்டு பிடித்தே ஆக வேண்டும் என்பது இவரின் அபிலாஷையாக மாறிவிட்டது. சொந்தத் தாயைப் பிரிந்தமை நிவர்த்தி செய்ய முடியாத இழப்பு என்கின்றார்.

இவருக்கு ஒரு அண்ணன் இருக்கின்றார். இவரும் நோர்வே தம்பதியால் இலங்கையில் இருந்து தத்து எடுக்கப்பட்டவர்தான். ஆனால், சொந்தத் தாயைப் பிரிய நேர்ந்தமை பற்றி அவர் கவலைப்படுபவராக இல்லை எனவும் தெரியவருகிறது.

## ஒரு கிராம் ஹெரோயினுக்கு ஒன்பது வருட சிறைவாசம்

(கொழும்பு)

ஒரு கிராம் ஹெரோயினை வைத்திருந்தார் என குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட பெண்ணொருவர் 9 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சோக சம்பவமொன்று வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தந்தையில்லாத 3 பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் தலைவியான சோமாவதி, கடந்த 2003ஆம் ஆண்டு மொரட்டுவை-பாணந்துறை நோக்கிப் பயணிக்கும் ரயிலில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மொரட்டுவை நீதிவான் உத்தர விட்டுள்ளார். இதன்பின் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளினால் மறக்கப்பட்ட இவர் கடந்த ஒன்பது வருடங்களை விசாரணை இன்றியே சிறையில் கழித்துவிட்டார்.

இவர் முறைப்படி விசாரிக்கப்பட்டிருந்தால் ஆகக்கூடியதாக இவருக்கு 7 வருட சிறைத் தண்டனைதான் கிடைத்திருக்கும். இவ்வாறான குற்றத்துக்கு ஆகக் குறைந்த தண்டனையாக 3 வருட சிறைத் தண்டனை கூட இவருக்கு கிடைத்திருக்கலாம்.

இந்நிலையில், சோமாவதி தனது நிலைமை குறித்து நீதியரசருக்கு எழுதிய கடிதத்தை தொடர்ந்து இவரது சோகக் கதை அம்பலமாகியிருந்தது. சிறை அதிகாரிகள் சோமாவதியை பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழு முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இதனையடுத்து, சோமாவதியை உடனடியாக வீட்டுக்கு அனுப்பி வைக்கும்படி சிறை அதிகாரிகளுக்கு கட்டளையிட்ட பிரதம நீதியரசர், சோமாவதிக்கு இனிமேல் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் நல்ல வாழ்க்கையில் ஈடுபடுமாறு புத்திமதி கூறி விடுவித்தார்.

## பொருளாதார மேம்பாட்டுக்கு....

பனைசார் வளங்களை அதிகரிப்பதும் வளர்த்தெடுப்பதும் மட்டுமன்றி அதுசார்ந்து வாழுகின்ற குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பனை அபிவிருத்திச் சபை முழுமையாக உழைக்க வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்திலேயே உச்சகட்ட பயன்களை பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு உயர் அதிகாரிகளும் பணியாளர்களும் துறைசார்ந்த அனைவரும் உண்மைத் தன்மையோடும் நியாயத் தன்மையோடும் தமக்குரிய பணிகளைச் செய்ய வேண்டும். கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாக பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் கொழும்பில் இயங்க வேண்டிய சூழல் இருந்து வந்த நிலையில் மீண்டும் யாழ்ப்பாணத்தில் அதன் பணிகளை ஆரம்பித்துள்ளதுடன் கொழும்பிலுள்ள காரியாலயம் இனிமேல் யாழ்ப்பாணத்தின் கிளைக் காரியாலயமாக இயங்கும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்காலத்தில் பனைசார் வளங்களைப் பெருக்குவது மட்டுமன்றி பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுக்க எண்ணியுள்ளதாகவும் அதற்கு தடையாகவுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் எனவும் இதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

முன்பதாக ஏ - 9 வீதியிலுள்ள பனை அபிவிருத்திச் சபைக்கான தலைமை அலுவலகத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நாடாவை வெட்டி திறந்து வைத்ததுடன் புதிய அலுவலகக் கட்டிடத்தையும் பார்வையிட்டார்.

பின்னர் கேட்போர் கூடத்தில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் தலைமை உரை நிகழ்த்தியிருந்தார்,

பனை அபிவிருத்திச் சபை 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகவும் அதன் முதலாவது தலைவராக கே.சி நித்தியானந்தா அவர்கள் இருந்ததாகவும் அவருக்கு உதவியாளராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இருந்ததையும் இதன் போது பசுபதி சீவரத்தினம் நினைவு கூர்ந்தார்.

அமைச்சர் அவர்களின் தலைமையிலும் வழிகாட்டலின் கீழும் பனை அபிவிருத்திச் சபை பல்வேறு முன்னேற்றகரமான பணிகளை மேற்கொண்டு வருகின்றது. பனந்தொழில்சார் குடும்பங்களையும் நிறுவனங்களையும் மேம்பாடடையச் செய்து அவற்றின் மூலம் கிடைக்க வருகின்ற பல்வேறு உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதும் எமது நோக்கமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் தலைமை அலுவலகத்திற்கான உதவி பொதுமுகாமையாளர், உதவி பொதுமுகாமையாளர் அபிவிருத்தி ஆகியோருக்கான நியமனக் கடிதங்களையும் அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அத்துடன் கிளிநொச்சி மன்னார் மாவட்டங்களுக்கான பனை அபிவிருத்திச் சபையின் இணைப்பாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்களையும் அமைச்சர் அவர்கள் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் லோகநாதன் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி சங்கங்களின் சமாசத் தலைவர் சிவலிங்கம் ஈ.பி.டி.பியின் சர்வதேச முக்கியஸ்தர் தோழர் விந்தன் ஆகியோருடன் துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# மக்கள் காலங் காலமாக வாழ்ந்த இடங்கள் அவர்களுக்குரியதுதான்

## பொன்னகரில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உரை

(கிளிநொச்சி)

மக்கள் தாங்கள் காலம் காலமாக வாழ்ந்த இடங்கள் அவர்களுக்குரியதுதான் இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் (அசோக்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கிளிநொச்சி பொன்னகரில் மக்களுக்கு அவர்களுடைய வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று பொன்னகர் மக்களின் வாழ்வில் ஒரு மகிழ்ச்சிகரமான நாள். பொன்னகர் மக்கள் விடயத்தில் பலர் பல்வேறு பொய்யான கருத்துக்களைக் கூறி மக்களை தவறான வழியில் இட்டுச்சென்றனர். இனிமேல் பொன்னகர் மக்களின் வாழ்க்கை தெருவில்தான் என்றும் கூறிவந்தனர். ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. அவர்களுடைய சுயலாப பிரச்சாரங்களைப் பொய்யாக்கி மக்களின் வாழ்விடங்கள் மக்களுக்குத்தான் என்பதனை நிரூபித்துள்ளோம். இவ்வாறு தான் இனிவரும் காலங்களிலும் எமது மக்களுடைய வாழ்வில் பல்வேறு நல்ல மாற்றங்கள் நிகழும். அதற்கு இந்த நிகழ்வும் ஒரு உதாரணம். சில விடயங்களில் காலதாமதங்கள் ஏற்படலாம். ஆனால், அவை நிரந்தரமாகிவிடாது எனவும் குறிப்பிட்ட அவர், இன்று பொன்னகர் மக்களுக்கு இருபது வீடுகள் கையளிக்கப்படுகின்றது. அதே போன்று ஏனைய வீடுகளும் விரைவில் புனரமைக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்படும். அத்தோடு காணி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்படும்.

மேலும் காணி உள்ளவர்களுக்கு ஏதேனும் வீட்டுத்திட்டத்தினூடாக வீடுகள் அமைத்துத் தருவதற்கும் காணி அற்றோருக்கு காணிகள் வழங்குவதற்கும் இன்று வீடுகள் கையளிக்கப்படாதவர்களுக்கு அவர்களுடைய வீடுகளை படிப்படியாக வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய வடமாகாண ஆளுநர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளும் முயற்சியும்



தான் உங்களின் வீடுகள் இன்று உங்களிடம் கிடைக்கின்றன எனவும் அவரின் மற்றுமொரு வேண்டுகோளுக்கிணங்க கூரைத் தகடுகள் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நாளை முதல் 20 கூரைத்தகடுகள் வீதம் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, வடமாகாண ஆளுநரின் மேலதிக செயலாளர் தி. இராசநாயகம் கரைச்சி பதில் பிரதேச செயலர் சத்தியசீலன் வைத்திய அதிகாரி கார்த்திகேயன் பிரதேச இராணுவ அதிகாரி பிரிகேடியர் ரட்ணசிங்கம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் முத்திப்பேறுபெற்ற நிலைக்கு உயர்வு

## வத்திக்கான் திருப்பீடம் அறிவிப்பு


(கொழும்புத்துறை)

மறைந்த முன்னாள் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை முத்திப்பேறு பெற்றவர் நிலைக்கு உயர்த்துவதாக வத்திக்கான் திருப்பீடம் கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி அறிவித்துள்ளது.

இறை இரக்கத்தின் ஞாயிறான மே மாதம் முதலாம் திகதியன்று 16ஆம் பெனடிற் இவ்விழாத் திருப்பலியை ஒப்புக் கொடுத்து இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை முத்திப்பேறு பெற்றவர் என அறிவிக்கவுள்ளார்.

இவர் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் நாள் இந்த இறை இரக்கத்தின் ஞாயிறு திருவிழிப்பன்றே இறைபதம் அடைந்தார். இவரது ஆசீர்வாதத்தால் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரி ஒருவர் பார்க்கின்சன் நோயிலிருந்து அற்புதமாகக் குணமாகினார் எனக் குறிப்பிடப்படுகிறது.

திருத்தந்தை 16ஆம் பெனடிக் பங்குகொள்ளும் இவ்வழிபாட்டு நிகழ்வுகளை உலகிலுள்ள அனைத்துக் கிறிஸ்தவ மக்களும் நேரடியாக இணையத்



தளத்தினூடாகப் பார்க்க முடியும் எனவும், இதற்கான ஏற்பாடுகளை வத்திக்கான் வானொலி மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (52)

# கடல் கடந்து வந்தன அஞ்சலி உரைகள்

## தொலைபேசி ஊடாக இரங்கல் உரை

வே.பிரபாகரனின் தாயாரான பார்வதி அம்மாளின் இறுதிக் கிரியைகளின்போது இந்தியாவின் ம.தி.மு.க. தலைவர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தின் தலைவர் நெடுமாறன், திரைப்பட இயக்குநர் சீமான், கவிஞர் காசி ஆனந்தன், ஆகியோர் தொலைபேசி மூலம் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

வல்வெட்டித்துறை தீருவில் மைதானத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தின்போது, இந்தியாவிலிருந்து இவர்கள் தொலைபேசி மூலம் ஆற்றிய உரைகள் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்குச் செவிமடுக்கச் செய்யப்பட்டதாக தீருவில் சதுக்கத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை தாம் மறந்துவிடவில்லை எனவும் இலங்கைத் தமிழர்களுக்காக தாம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவோம் எனவும் தமிழக பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.



சாவாந்துறைப் படிப்பகம்
சபை, யாழ்ப்பாணம்.



# தேர்தல்கள் ஆணைக்குழுக்களை நிறுவ இலங்கை அரசு தீவிரமான நடவடிக்கை

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மற்றும் ஒத்திவைக்கப்பட்டுள்ள தேர்தல்கள் யாவும் நிறைவடைந்ததும் தேர்தல்கள் ஆணைக்குழுக்களை நிறுவ இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளதாகவும், அதற்காக மூன்று ஆணைக்குழுக்களின் விபரம் எதிர்வரும் வாரம் நாடாளுமன்ற சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

இதன்பிரகாரம் அரசியலமைப்பின் பதினெட்டாம் சீர்திருத்திற்கு அமைவாகவே ஆணைக்குழு நிறுவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தற்சமயம் உடனடியாக மூன்று ஆணைக்குழுக்களின் பெயர் விபரங்கள் அத்திருத்திற்கு அமைவாக நாடாளுமன்ற சபைக்கு கையளிப்பதற்கு ஏற்பாடகியிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதனடிப்படையில் இன்று 23ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ள நிலையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு ஆகிய ஆணைக்குழுக்களுக்கான பெயர் விபரங்களே கையளிக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

இலங்கையின் 18ஆவது அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டதன் பிரகாரம் நாடாளுமன்றப் பேரவைக்கு பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் தங்களுடைய பிரதிநிதிகளை நியமித்தனர். அவ்விருவரும் அப் பதவிகளை ஏற்க மறுத்ததை அடுத்து வேறிருவர் நியமிக்கப்பட்டனர். நாடாளுமன்ற பேரவை இலங்கை ஜனாதிபதியினால் முழுமையாக நியமிக்கப்பட்டதை தொடர்ந்தே ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் நாடாளுமன்ற சபையினால் நியமிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆயுதம் வைத்திருந்தால் பிணை கிடையாது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பதை பிணையில் வெளிவர முடியாத குற்றமாகப் பிரகடனப்படுத்துவதற்கான புதிய சட்ட மூலமொன்றைக் கொண்டுவரும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையப் பகுதியில் வீடு ஒன்றில் கழுத்தில் சுருக்கு மாட்டி இறந்ததாகக் கருதப்படும் சிறுவன் ஒருவருடைய சடலம் நேற்றுக்காலை யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டது.

உரும்பிராய் வடக்கு உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் லக்சன் (வயது 16) என்பவர் மேற்படி இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (பா)

# இந்திய வீட்டுத்திட்டம் இன்னமும் எட்டாக்கனியே

## ஏக்கத்துடன் இடம்பெயர்ந்த மக்கள்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களுக் கென இந்திய அரசாங்கத்தால் உறுதியளிக்கப்பட்ட வீடுகளில் ஒன்றுகூட இதுவரை கட்டி முடிக்கப்படவில்லை.

இடம்பெயர்ந்த மக்களுக்கு 50 000 வீடுகள் கட்டிக் கொடுப்பதாக இந்திய அரசாங்கம் உறுதியளித்திருந்தது. ஆனால் தொடக்க நிகழ்வுக்காக அமைக்கப்பட்ட அத்திவாரங்களை மட்டுமே காணக்கூடியதாக உள்ளதாக யாழ். மாவட்ட செயலக அதிகாரி ஒருவர் கூறினார்.



இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதான இந்திய அரசாங்கத்தின் முடிவினை, 2010 ஜூன் மாதம் இலங்கை அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்ததோடு, 1000 வீடுகளுக்கான பணிகள் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்படுமெனவும் அறிவித்தது.

இந்தியாவின் Free Fab நிறுவனத்தினால் முதற்கட்டமாகக் கட்டப்படும் 1000 வீடுகள், ஏப்ரல் மாதம் மக்களுக்கு கையளிக்கப்படுமென கூறப்பட்ட போதும், கட்டடப்பணிகள் இன்னமும் தொடங்கப்படவில்லை என அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# இறுதி நிகழ்வுக்குச் செல்ல பல்கலை. மாணவருக்குத் தடை

## தடுத்து நிறுத்தினர் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து பேருந்து ஒன்றில் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் இறுதி நிகழ்வில் கலந்து கொள்ளவென நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஆயத்தமாகிய பல பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் புறப்பட விடமால் தடுத்து நிறுத்தியதாக யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பேருந்தையும் பொலிஸார் திருப்பியனுப்பியதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக பார்வதி அம்மாளின் இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள முடியாமல் ஏமாற்றமடைந்த பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்று கூடியிருந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து அகன்று சென்றனர். மேலும் யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலின் பகுதியிலும் மருந்துவ பீடம் அமைந்துள்ள பகுதியிலும் பொலிஸார் மாலைவரை நிறுத்தப்பட்டிருந்தனர். (பா,26)

## பூதவுடல் அக்கினியுடன்...

பார்வதி அம்மாளின் மகளின் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கும் மக்கள் திரண்டு சென்று அஞ்சலி செலுத்தினர். அங்கு இடம்பெற்ற சமயக்கிரியைகளைத் தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

டாக்டர் மயிலேறும் பெருமாள் தலைமையில் இடம்பெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில், பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்று பலரும் உரை நிகழ்த்தினர்.

அத்துடன், தமிழக அரசியல் தலைவர்களான வைகோ, பழ.நெடுமாறன், நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமான் மற்றும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் மற்றும் நோர்வே தமிழர் அவையின் பிரதிநிதி ஆகியோர் தொலைபேசி மூலம் அஞ்சலி உரை நிகழ்த்தினர். இவ் உரைகள் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப்பட்டன.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், பி.சரவணபவன், சிவசக்தி ஆனந்தன், சி.யோகேஸ்வரன், பி.அரியநேந்திரன், வினோநோகதாரலிங்கம் மற்றும் எஸ்.சிறிதரனும், தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிறிகாந்தா ஆகியோரும் கலந்துகொண்டதாக அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து மாலை 2.30 மணியளவில் தொண்டமானாறு-வல்வெட்டித்துறை-பருத்தித்துறை வீதியூடாக வல்வெட்டித்துறை ஊறணி இந்துமாயனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல் அங்கு சிதை மூட்டப்பட்டது. பிரபாகரன் குடும்பத்தினரது இரத்த உறவினரான சங்கர் நாராயணன் கிரியை விதிகளின்படி சிதைக்கு தீ மூட்டினார். சரியாக மாலை 4.58 மணியளவில் பார்வதி அம்மாவின் பூதவுடல் தீயுடன் சங்கமமாகியது. தமிழர் மனங்களில் சோகம் குடிபுகுந்து மனங்களைக் கல்லாக்கியது.

# தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்; திருமாவளவன் கைது

(சென்னை)

சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் உள்ளிட்ட சுமார் 300 பேர் அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தயார் பார்வதி அம்மாளின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் எம்.பி.யுமான திருமாவளவன் உள்ளிட்ட குழுவினர் நேற்று அதிகாலை பண்டாரநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இருப்பினும் அவர்களுக்கான அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் அதே விமானத்தில் அவர்கள் சென்னைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள். இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு முழுவதும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இதன் பிரதான ஆர்ப்பாட்டம் திருமாவளவன் தலைமையில் சென்னையில் நடத்தப்பட்டது. இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட முயற்சித்த போது பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தி திருமாவளவன் உள்ளிட்ட சுமார் 300 பேரைக் கைது செய்தனர் என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாட்டுக்கு எதிராக...

பொய்யான பிரசாரங்களை மேற்கொள்ளும் புலிகளின் ஆதரவு இணையத்தளங்களை பார்வையிடுவோர் இப்போதுகூட லட்சக்கணக்காக இருக்கலாம். இவற்றை வாசிப்பவர்கள் இந்த நாட்டை பயங்கரமானதாக பார்க்கின்றனர்.

இப்போது இலங்கை மீது எவரும் பௌதிக யுத்தமொன்றை நடத்த முடியாது. ஆனால், இணையவெளி மீது தாக்குதல்களை நடத்த வாய்ப்புகள் உள்ளன எனவும் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜயசூரிய மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, புலிகளின் ஆதரவாளர்கள் மற்றும் இலங்கைக்கு எதிரான சக்திகளிடமிருந்து இலங்கை தனது இணையவெளியை பாதுகாப்பதற்கு 'இணையச் சிப்பாய்கள்' தேவைப்படுவதாக அங்கு கூடியிருந்தவர்களை நோக்கி கோரிக்கை விடுத்தார்.

இணைய தடயவியல் என்பது மிக கடினமானதாகும். ஆனால், தேசிய மற்றும் நிறுவன ரீதியில் உயர்தரமான இணையத் தடயவியல் பொறிமுறையைக் கொண்டிருப்பது மிக அவசியம். இந்த நோக்கத்திற்காகவும் இணையப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், இணைய யுத்தத்தை எதிர்கொள்ளவும் இணையச் சிப்பாய்கள் தேவை என அவர் தெரிவித்தார்.

இராணுவத்தின் மனிதாபிமான நடவடிக்கையின்போது இராணுவத்தின் இணையத் தளமும் தாக்குதலுக்கு இலக்கானது. தற்போதுகூட எமது இணையத் தளத்தில் ஊடுருவித் தாக்குவதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் நடைபெறுகின்றன. இதுவரை எமது இணையத் தளத்தை நாம் வெற்றிகரமாக பாதுகாத்து வந்துள்ளோம் என இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

30 வருடகால பௌதிக ரீதியான யுத்தத்தில் நாம் வென்றுள்ளோம். ஆனால், பயங்கரவாதிகளை நாட்டிலிருந்து ஒழித்ததால் ஆயுதங்கள் முடிவுக்கு வரவில்லை. நாமும் முழு உலகமும் - பௌதிக ரீதியான யுத்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் - இணைய யுத்தம் எனும் யுத்தத்திற்கு தொடர்ந்து முகம் கொடுத்து வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருப்பி அனுப்பப்பட்டார்...

சடங்குகள். அவரது சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் நேற்று நடைபெற்றது. பொது மக்களின் அஞ்சலிக்காக தீருவில் மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு ஆயிரக் கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில், அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக திருமாவளவன் உள்ளிட்ட குழுவினர் நேற்று அதிகாலை 2 மணியளவில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இருப்பினும், அவர்களை விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்திய பாதுகாப்புத் தரப்பினர் மீண்டும் அவர்களை சென்னைக்கு உடனடியாகத் திருப்பி அனுப்பியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சென்னைக்கு திரும்பிச் சென்ற திருமாவள வன், தான் திருப்பி அனுப்பப் பட்டதானது, இந்தியாவுக்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துவேன் என்றும், சென்னை விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களுக்கு பேட்டியளித்துள்ளார்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16. இரு எண்களைப் பெருக்கும்போது கிடைப்பது 20. அவ்விரு எண்களையும் கூட்டும்போது கிடைப்பது 9. அவ்விரு எண்களும் எவை?

..........................................................

17. ஒரு விருந்துபசாரத்தில் மொத்தமாக 80 பேர் பங்குபற்றினார்கள். அதில் ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் எண்ணிக்கை 24 அதிகமாகும். எனவே அங்கு காணப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை யாது?

..........................................................

18. ஒரு செவ்வக வடிவ மைதானத்தின் நீளம் 250 மீற்றர். அகலம் 150 மீற்றர். இதன் சுற்றளவு எத்தனை மீற்றர்?

..........................................................

19. நந்துவின் நிறை 26kg 500g. சுந்து, பிந்து இருவர்களினதும் நிறைகள் சமன். நந்து, சுந்து, பிந்து மூவரினதும் நிறை 82kg 200g எனின் பிந்துவின் நிறை என்ன?

..........................................................

20. பயணம் ஒன்று 7 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் வரை நடைபெற்று பி.ப. 9.50 மணிக்கு நிறைவடைந்தது. பயணம் ஆரம்பித்த நேரத்தை எழுதுக.

..........................................................

21. 215.3 உடன் 34.5 இனைக் கூட்டுக.

..........................................................

22. ஒரு குறிப்பிட்ட பரீட்சை விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரு பாடங்களில் மட்டும் நடைபெற்றது. 200 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 100 பேர் கணிதமும் 120 பேர் விஞ்ஞானமும் சித்தியடைந்தனர். விஞ்ஞானம் சித்தியடையாதோர் எத்தனை பேர்?

..........................................................

**கீழ் வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

23. ரூபா. 20.00 இற்கு 25 ரொபிகள் வாங்கலாமாயின் ரூபா 80.00 இற்கு எத்தனை ரொபிகள் வாங்கலாம்?

..........................................................

24. ஒரு கிலோ உருளைக் கிழங்குகளின் விலை ரூபா.48.00 எனின், 650 கிராம் உருளைக் கிழங்கின் விலை என்ன?

..........................................................

25. **'கணனி'** என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலையுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.

1. ..........................................................

..........................................................

2. ..........................................................

..........................................................

3. ..........................................................

..........................................................

4. ..........................................................

..........................................................

5. ..........................................................

..........................................................

6. ..........................................................

..........................................................






# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

நேரம் -1மணி 15நிமி

# கல்வி முரசு

வெளியீடு 02



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


**01) கீழே தரப்பட்ட கடிதத்தை வாசிக்குக.**

இல. 8B 3/2 பெரேரா லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு.
23.01.2008

வணக்கம் நான் நல்ல சுகமாக இருக்கின்றேன். உனது சுகத்தை அறிய ஆவலாக உள்ளேன். உனது கடிதம் நேற்றுக் கிடைத்தது. நீ கேட்டுக்கொண்டபடி அவுஸ்ரேலியா, கனடா, நோர்வே நாட்டு முத்திரைகளை அனுப்புகிறேன். உன்னிடம் பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளின் முத்திரைகள் இருந்தால் எனக்கு அனுப்பிவைக்கவும்.

நன்றி
வணக்கம்

இப்படிக்கு,
அன்பு நண்பன்
இ.ராஜ்குமார்.

1. இக்கடிதம் யாரால் எழுதப்பட்டுள்ளது?

..........................................................

2. இக்கடிதத்தை எழுதியவர் வசிக்கும் முகவரியை எழுதுக?

..........................................................

3. இக்கடிதம் எப்போது எழுதப்பட்டது?

..........................................................

4. இக்கடிதத்தை எழுதியவருக்கும் மற்றையவருக்கும் இடையேயான தொடர்பு என்ன?

..........................................................

5. இக்கடிதம் என்ன நோக்கோடு எழுதப்பட்டுள்ளது?

..........................................................

**02) கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களின் பொருளைத் தரும் தமிழ்ச் சொற்களைப் பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

1. Letter :.............................. 2. Stamp :.................................. 3. Thanks : ...........................

**03) சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. பந்தியில் இருந்து இரண்டு பன்மைச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.

..........................................................

2. "நேற்று" என்னும் சொல்லின் நிகழ்காலச் சொல்லையும் எதிர்காலச் சொல்லையும் எழுதுக.

**04) பின்வரும் சிங்களச் சொற்களின் பொருள் தரும் தமிழ்ச் சொற்கள் கடிதத்தில் உண்டு. அவற்றைத் தேடியறிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. ஆயுபோவன் :.................................... 2. தகலுவா :....................................

3. ஸ்(த்)துதிய் :.................................... 4. சனீப்ப :....................................

**கீழ்வரும் பாடலைக் கவனமாக வாசிக்குக.**

வெட்டியடிக்கும் மின்னல் - கடல்
வீரத்திரை கொண்டு விண்ணையடிக்குது
கொட்டியடிக்குது மேகம் - கூ கூ வென்று
விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா.

**05) கீழ்வரும் சொற்களின் ஒத்த சொல்லை பாடலில் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. ஆழி :.................................... 2. திக்கு :....................................

3. புனல் :....................................

**06) கீழ்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச் சொல்லைப் பாடலில் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. மண் :.................................... 2. அண்ணா :....................................

3. வெயில் :....................................

**07) சரியான விடையை இடைவெளியில் எழுதுக.**

1. ஆகாயம் என்னும் சொல்லின் பொருளை உணர்த்தும் மூன்று சொற்கள் பாடலில் உண்டு. அம்மூன்று சொற்களையும் எழுதுக.

....................................................................................................

2. மின்னலுடன் சேர்ந்து வருவது என்ன?

....................................................................................................


3. அசைகின்ற வளியை எவ்வாறு அழைப்பர்?

....................................................................................................

4. எட்டுத் திசைகளும் எவை?

v) .................................... vi).................................... vii) .................................... viii)....................................

**08) அருகே தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து விடை எழுதுக.**



1. வானத்தினூடாகப் பிரயாணம் செய்பவை எவை?

2. தரையின் மீது பிரயாணம் செய்பவை எவை?


3. கடல் மீது பிரயாணம் செய்பவை எவை?

4. விசேட பாதைமீது பிரயாணம் செய்வது எது?





**09) கீழே தரப்பட்டுள்ள உயிரினங்களின் பெயர்களை எழுதுக.**







.................................... .................................... ....................................

**10) கீழேயுள்ள அட்டவணையில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

| | கணிதவுரு | நேரான விளிம்புகளின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை | முகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | (உ+ம்) கனவுரு | 12 | 8 | 6 |
| 1. | உருளை | | | |
| 2. | நான்முகி | | | |
| 3. | கோளம் | | | |
| 4. | சதுரமுகி | | | |

11. சீரான சுற்றுப்பருமன் உடைய பனை மரம் ஒன்றின் முனைகள் ஒழுங்காக இருக்கத் தக்கவாறு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு வெட்டப்பட்ட குற்றிகளுக்கு வழங்கத்தக்க கணிதப் பெயர் என்ன?

....................................................................................................


12. குமார், தனது சம்பளத்தின் 1/2 பகுதியை உணவுக்காகவும் 1/4 பகுதியை ஆடை வாங்கவும் செலவு செய்துவிட்டு மிகுதியைச் சேமிப்பிலிட்டான். அவனுடைய சம்பளம் ரூபா 4800 எனின் அவன் ஆடை வாங்கச் செலவு செய்த பணம் எவ்வளவு?

....................................................................................................

13. "தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது" என்னும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

....................................................................................................


**பின்வரும் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

14. 


கமலாவும் விமலாவும் அரையாண்டுப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் விபரத்தை வரைபு காண்பிக்கிறது. கமலா விமலாவை விட 60 புள்ளிகள் குறையப் பெற்றாள். எனின் விமலா பெற்ற புள்ளிகள் எத்தனை?

....................................................................................................

15. அருகில் தரப்பட்ட கூட்டற் பிரசினத்தில் △ இனால் ஓர் இலக்கமும் □ இனால் ஓர் இலக்கமும் காட்டப்பட்டுள்ளது. எனின் △ இனாலும் □ இனாலும் குறிப்பிடப்படும் இலக்கத்தை எழுதுக.




△ =.................................... □ =....................................